மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 30 சனிக்கிழமை (13.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily இதழ்: 199

# அகதிகளை முகாம்களில் தடுத்து வைத்திருப்பதை ஆட்சேபித்து அடிப்படை உரிமை மீறல் மனுக்கள்

## கொடிகாமம், வவுனியா முகாம்களில் தங்கியுள்ளோர் சார்பில்

கொழும்பு, ஜூன் 13

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களை, முகாம்களில் தடுத்து வைத்திருப்பது அடிப்படை உரிமை மீறல் எனத் தெரிவித்து, அதற்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் ஒரு மனுவை, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து சார்பில் சட்டத்தரணி நிலாந்தி டி.சில்வா நேற்று உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இதேவேளை இடம்பெயர்ந்து கொடிகாமம் மற்றும் 'வவுனியா முகாம்களில் தங்கியுள்ள ஐவர் சார்பில், சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜா, அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அந்த மனு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மனுவை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஜெகத் பாலபட்டபெண்டி, சந்திரா ஏக்கநாயக்கா ஆகியோரைக்கொண்ட ஆயம், ஆட்சேபனைகளை எதிர்வரும் பதினேழாம் (17) திகதி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பின் புதிய எம்.பி. பதவியேற்பு

கொழும்பு, ஜூன் 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய நாடாளுமன்ற உறுப்பினராக அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தோமஸ்வில்லியம் தங்கத்துரை நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.அதிகாரி மார்க்கின் தகவலை மறுக்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூன் 13

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ளவர்கள் அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முகாம்களில் நீண்ட நாள்கள் தங்கியிருக்க வேண்டியநிலை ஏற்படக் கூடும் என ஐ.நா. அதிகாரி மார்க்கட்ஸ் வெளியிட்ட தகவலை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ரயில்வே பாதைகள் காணிகளில் இப்போது இடம்பெயர்ந்து வாழும் 247 குடும்பங்கள்

### இம்மாத இறுதிக்குள் வெளியேறுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன், 13

குடாநாட்டில் ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான ரயில்பாதைகள் மற்றும் ரயில் நிலையங்கள் அமைந்திருந்த காணிகளில் 247 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

யாழ். மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த விவரம் தெரியவந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் வைத்தியசாலையில் இருந்த மற்றொரு நோயாளியும் மாயமானார்!

### இதுவரை ஆறு நோயாளர்கள் தப்பிச் சென்றனர்

கொழும்பு, ஜூன் 13

மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒரு வன்னி நோயாளி கடந்த செவ்வாய்க்கிழமை தப்பிச்சென்றுள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுரேந்திரன் (வயது -32) எனும்நோயாளியே தப்பிச்சென்றுள்ளார். மன்னார் பொது வைத்தியசாலையின் முழு சுற்றுப்பகுதியி லும் படையினர் காவல் கடமையில் ஈடுபட்டுள்ள சமயத்திலேயே இவர் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது .

இது வரையில் மன்னார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுவர்கள் உட்பட 06 நோயாளர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வு முயற்சிகளில் கூட்டமைப்பும் இணையவேண்டும்

### அமைச்சர் டிலான் பெரேரா அழைக்கிறார்

கொழும்பு, ஜூன் 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிரவாதப் போக்கில் இருந்து விடுபட்டு, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய அதிகாரப்பகிர்வு முயற்சியில் ஒன்றிணைய வேண்டும் என்று அமைச்சர் டிலான் பெரேரா கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற கே.சிவநேசனுக்கான அனுதாபப் பிரேரணையில் கலந்துகொண்டு உரை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் வைத்திய நிபுணர் துரைக்கேதீஸ் நேற்று நீதிமன்றில் ஆஜர்

### ஜோர்ஜ் மாஸ்ரர் 3 மணி நேரம் ஒப்புதல் வாக்குமூலம்

கொழும்பு, ஜூன், 13

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய ஜோர்ஜ் மாஸ்ரர், கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி த.சத்தியமூர்த்தி மற்றும் புலிகளின் வைத்திய நிபுணர் எனக் கூறப்படும் டாக்டர் கந்தசாமி துரைக்கேதீஸ், அவரது தாதியான ஆறுமுகம் ஜெயலட்சுமி ஆகியோரை குற்றப்புலனாய்வுத் துறையினர் நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

ஆஜர்படுத்தப்பட்ட அனைவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வுத்துறையினருக்கு பிரதம நீதி வான் நிஷாந்த ஹப்புராய்ச்சி உத்தரவிட்டார்.

அதேவேளை பிரதம நீதிவான் நிஷாந்த ஹப்புராய்ச்சி முன்னிலையில் ஜோர்ஜ் மாஸ்ரர் சுமார் மூன்றுமணிநேரம் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை நேற்று அளித்தார்.

(அ-சி)

## அகதிகளை மீளக்குடியமர்த்துவதற்கான உறுதியான திட்டங்கள் அரசிடம் இல்லை

### மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டுகிறது

கொழும்பு, ஜூன் 13

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த 3 லட்சம் தமிழர்கள் காலவரையறையின்றி முகாம்களில் தடுத்து வைக்கப்படும் அபாயம் குறித்து சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் எச்சரித்துள்ளது.

இந்த மக்களை மீள் குடியமர்த்துவதற்கான உறுதியான திட்டங்கள் எவையும் இல்லாமையையும் கடந்தகால செயற்பாடுகளையும் சுட்டிக்காட்டி இந்த எச்சரிக்கையை நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட சர்வதேச

(13 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை கிழக்கில் நாவலடி வரை நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 13

அரியாலை கிழக்கில் நாவலடி வரை பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பழைய கொழும்பு - யாழ். ரயில் பாதை வீதிக்கு அப்பால் நாவலடி வரையுள்ள நெற்காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ள விவசாயிகளுக்கு அனுமதி வழங்கவென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் நெற்செய்கை மேற்கொள்வதற்காக அரியாலை விவசாய சம்மேளனத்தில் பதிவுகளை மேற்கொண்டவர்களுடன்அப்பிரதேச இராணுவ சிவில் இணைப்பதிகாரி நாளை கலந்துரையாடவிருக்கிறார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் இக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

விவசாயிகள் தமது ஆவணங்களுடன் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரிய அறிவுரைகளை மேற்கொள்ளுமாறு அரியாலை விவசாய சம்மேளனம் கேட்டுள்ளது. (1)

## உடுவில் பிரதேச செயலக சுற்றாடல் தின நிகழ்வு

வலி. வடக்கு, ஜூன் 13

உடுவில் பிரதேச செயலகம் 'வேள்ட் விஷன்' நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தும் சர்வதேச உலக சுற்றாடல் தினமும் சுற்றாடல் பாதுகாப்பு விழிப்புணர்வும் மரம் வழங்கல் நிகழ்வும் நாளை மறுதி னம் திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் புன்னாலைக்கட்டுவன் திடற்புலம் கிராம ஒளியகம் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக 'வேள்ட்விஷன்' நிறுவன யாழ். மாவட்ட இணைப்பாளர் மே.வசந்தநாயகமும் சிறப்பு விருந்தினராக வலி.தெற்குப் பிரதேச சபைச் செயலர் திருமதி சொக்கலிங்கம், மத்தி சுற்றாடல் அதிகாரசபை யாழ். மாவட்ட இணைப்பாளர் திருமதி வி.சத்தியகுமார் பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி கௌ. தலசொரூபன் உட்பட பலரும் கலந்து கொள்வர். (203-86)


**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: A.S.S பாம், தியேட்டர் வீதி, இணுவில்

**திறப்புவிழா அழைப்பு**

**Winsoft Technology**

- Computer Education Centre -

சுன்னாகம் நகரில் தகவல் தொழிநுட்பத்துறையில்

புத்தொளி பரப்ப புகையிரத நிலைய வீதியில் கணனி கல்வி நிலையம்

நிகழும் வைகாசி திங்கள் 13.06.2009 இன்று

காலை 10.30 மணி தொடக்கம் 12.00 மணிவரையுள்ள சுபநேரத்தில்

திரு. K. முருகேசு

(ஓய்வுபெற்ற உதவிப்பணிப்பாளர், திறைசேரி)

அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(மேற்படி அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள்)

- இயக்குனர் -
திரு. த. தவகதன்

**Winsoft Technology**
Station Road,
Chunnakam.

T.P:- 0718839361


## மாநகரசபை யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தலுக்கான காலநீடிப்பு

கடந்த 09.06.2009 அன்று பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட மாநகரசபைக்குரிய சனசமுகநிலையங்கள் / நூலக நிர்மாண மற்றும் நூலக மீதி வேலைகளுக்கு என்னால் கோரப்பட்ட கேள்விகளுக்குரிய கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி 12.06.2009ஆம் திகதியிலிருந்து 19.06.2009ஆம் திகதி வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளதென்பதை அறியத் தருகின்றேன்.

மு.செ.சரவணபவ,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


**லண்டனில் உயர்கல்வி பயில்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு**

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள (லண்டன்) உள் துறை அலுவலகத்தால் 'A' தரத்தில் பட்டியலிடப்பட்ட தலைசிறந்த, நீண்டகால வரலாற்றையுடைய பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் விரும்பிய கற்கைநெறிகளுக்கு அனுமதி.

குறைந்த கட்டணச்சலுகைகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள், தங்குமிடவசதி ஏற்பாடுகள், பகுதிநேர வேலைக்கான ஆலோசனைகள் என்பனவும் வழங்கப்படும்.

நாளை (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை (ஒவ்வொரு ஞாயிறும்) காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நேரில் சந்திக்கலாம். ஏற்கனவே சந்தித்தவர்கள் தங்களிடம் கோரப்பட்ட விவரங்களுடன் நாளை (ஞாயிற்றுக்கிழமை) வரவும்.

உடன் தொடர்புகளுக்கு :-
தொ.பே.0212223818,
எந்த நேரமும் தொடர்புகொள்ள 0774528818
E.Mail : mg 1404_2009@ yahoo.com

148, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். ( யுனிசெவ் முன்பாக)


## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு , ஜூன் 13

யாழ். செயலக விளையாட்டுப்பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் வருடாந்த தடகள விளையாட்டு விழா இன்றும் நாளையும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். செயலக பிரதம கணக்காளர் க.சண்முகரட்ணம், யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன், யாழ்.செயலக புனர்வாழ்வு புனரமைப்பு திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன், யாழ். மத்திய கல்லூரி அதிபர் எல். ஓங்காரமூர்த்தி, யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் வி. அருளானந்தம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

முதல் நாள் நிகழ்வுகள் இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை வரை நடைபெறும். இறுதிநாள் நிகழ்வுகளும் பங்கேற்பு வைபவமும் நாளை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளன. (1-86)

* * *

வடமராட்சி, ஜூன் 13

அல்வாய், மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் இருபதுக்கு இருபது மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை மு.ப. 8 மணிக்கு வல்வெட்டி கழுகுகள் விளையாட்டுக்கழகமும், அல்வாய் கலை மகள் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

மு.ப. 10 மணிக்கு கம்பர்மலை விளையாட்டுக்கழகமும் கரவெட்டி திருவள்ளுவர் விளையாட்டுக்கழகமும், பி.ப. 3 மணிக்கு வதிரி டயமண்ட் விளையாட்டுக் கழகமும், வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும் போட்டியில் காலை 8 மணிக்கு அல்வாய் மாவில் விளையாட்டுக்கழகமும், குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகமும், மு.ப. 10 மணிக்கு கரவெட்டி விபுலானந்தா விளையாட்டுக்கழகமும், கரவெட்டி கிருஷ்ணா விளையாட்டுக் கழகமும், பி.ப. 3 மணிக்கு பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக்கழகமும், அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன. (1-236)

* * *

கைதடி, ஜூன் 13

கைதடி, நாவற்குழி குடும்ப முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தில் தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி த.சுபத்திரா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளர் சூ. அலெக்சாண்டர் சாள்ஸ் கலந்து கொள்வார்.(1-288)

### மாகாணப் போட்டிகள் குறித்த கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் இருந்து மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்குச் செல்லவுள்ள மாணவர்கள், அவர்களை அழைத்துச் செல்லவுள்ளபொறுப்பாசிரியைகள், உரிய பாடசாலைகளின் அதிபர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர்கள், உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பயண ஒழுங்குகள் தங்குமிட வசதி உணவு வசதி போன்ற விடயங்கள் தொடர்பாக இதில் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும்கலந்து கொள்ளுமாறு மாவட்ட விளையாட்டுக் குழுச் செயலர் கேட்டுள்ளார். (203)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னம்மா வேலுப்பிள்ளை



பளை, பெரியபளையைப் பிறப்பிடமாகவும் பழைய கமம் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும், இல.57, நெலுக்குளம், வவுனியாவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி சின்னம்மா வேலுப்பிள்ளை நேற்று (12.06.2009) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தம்பதிகளின் அன்பு மகளும், வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், பார்வதிப்பிள்ளை, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, சத்தியசீலன் (அமெரிக்கா), ஜெயசீலன் (ஆசிரியர், வவுனியா), குணசீலன் (ஆசிரியர், அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), ஜோகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பதுமநிதி, சிவராசா, கணேசராசா, செல்வராசா (லண்டன்), ஜெயச்செல்வி (ஆசிரியர், வவுனியா),சியாமளா (ஆசிரியர், ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நவநீதன், நிரூபன், சத்தியா, சங்கீதா, சிவரூபன், ஜெயரூபன், காந்தரூபன், பாமிசா, கயூரன், டயானி, கௌதமி, அபிநயா, அட்சயன், டிலக்சன், சைலன், அட்சனா, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.06.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நெலுக்குளம், சட்டநாதர், இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்: வே.குணசீலன்
(ஆசிரியர், அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்).
தொலைபேசி :- 024 492 0365, 077 949 1050

### செல்வராணி கார்த்திகேசு



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராணி கார்த்திகேசு நேற்று (12.06.2009) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலேசியன் பென்சனியர் கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் விமலாதேவி, கமலாதேவி, சுசிலாதேவி, வாமதேவன், தேவகி, காலஞ்சென்ற கெங்காதேவி மற்றும் பரமதேவன், உஷாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் வெற்றிவேலு, மஹேறாற்கட மூர்த்தி, ஸ்ரீகாந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் வாசுகி - குமாரதாஸ், வாசுதேவன், சிந்துஜா, வசுமதி - அகிலன் ஆகியோரின் பேர்த்தியும் ஆதித்தன், ஆதர்ஷா, அமிர்ஷன், அனிஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2009) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

122/10, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
கா.வாமதேவன்
(மகன்).

## மரண அறிவித்தல்

### கந்தையா சாமி (உரிமையாளர் K.S அம்பாள் மினிபஸ்)



பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சாமி 09.06.2009 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதியினரின் பாசமிகு மகனும், மகாலட்சுமியின் அன்புக் கணவரும் மகிந்தராசா (பிரான்ஸ், T.P-0033149633297), ரவீந்திரராசா (K.S அம்பாள் மினிபஸ்), யசோதா, மிகிந்தராசா(லண்டன் -T.P-00447529419466), சுவிந்தராசா (லண்டன்-T.P-00447883075285), லதாலட்சுமி (லண்டன்-T.P 00447529419456), ரஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும், நவநிதா, கமலேஸ்வரி, திரவியம் , நிரா, கார்லி, சாந்தகுமார், நடராசா (கவி), ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரஸ், மதுசன், யனுஸா, சானுஜா, நிலக்ஷி, சரண்யா, சஜீவன், சர்மினி, மினித் , மினிசா, கயில், கீரன், ஸ்கார்லெட், மோனிஷா, அனிஸ், கௌசிகன், அஜித்குமார், யதுசனா, ஜீவனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, இராசம்மா, கண்மணி, திருநாவுக்கரசு, மற்றும் சடாசிவம், நயினார், பிள்ளையம்மா, மங்கையர்க்கரசி, சண்முகராசா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பூவிலிங்கம், சுந்தரலிங்கம், மற்றும் கனகரத்தினம், செல்வராசா, கனகசுந்தரம், குமரேசன், நவமணி, பாலச்சந்திரன், இராசன், ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/5, 2 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
சாமி ரவீந்திரராசா (மகன்)
(K.S அம்பாள்).
T.P - 021 222 6569

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அகதிகளின் நிலையும் இந்தியாவின் பங்கும்

வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ள வன்னி மக்கள் - எமது இரத்த உறவுகள், குடும்ப உறவுகள், ஒரு தாய் பிள்ளைகள் - ஐ.நா.உயர் அதிகாரி ஜோன் ஹோம்ஸுக்கு இலங்கை அரசு உறுதி அளித்ததன் பிரகாரம் 180 நாள்களில் - ஆறு மாதங்களில் - மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவது சாத்தியம் இல்லை என்பதனை நேற்று இப் பத்தியில் குறிப்பிட் டிருந்தோம்.

அதனை எழுதிய மை காய்வதற்குள், நாம் தெரி வித்த கருத்தை ஊர்ஜிதம் செய்வதுபோல, ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரி மார்க் கட்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறார். அகதி மக்கள் ஆறு மாதங்களிலோ அல்லது இவ்வருட இறுதியிலோ தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்ல வசதி செய்யப்படும் என்று அரசாங்கம் ஐ.நா.வுக்கு உறுதி அளித்தது போன்று, அவர்கள் செய்வர் என்று தமக்குத் தோன்ற வில்லை என்று மார்க் மிக அப்பட்டமாகக் கூறியுள்ளார்.

அதற்கான சிறந்த உதாரணத்தை - காரணத்தை - மார்க் கட்ஸ் எடுத்துச் சொல்லியுள்ளார். வவுனியாவில் இப்போது தாம் அமைத்துக் கொடுத்த கூடாரங்களை (தற்காலிகம்) நிரந்தரக் கட்டடங்களாக அமைத்துத் தருமாறு இராணுவத்தினர் கேட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையிடம் விடுக்கப்பட்ட இந்தக் கோரிக்கை, ஒன்றை மட்டும் நூற்றுக்கு நூறு வீதம் ருசுப்படுத்துகிறது. அதாவது வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ள சுமார் 2 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் (இந்தப் புள்ளிவிவரம் ஐ.நா.வால் தெரிவிக்கப்பட்டது) இன்னும் பல வருடங்களுக்குத் தமது சொந்த மண்ணுக்குச் சென்று குடியேறுவதைக் கற்பனை தானும் செய்து பார்க்க முடியாது என்பதனை அது மிக மிகத் துலக்கமாக வெளிப்படுத்துகிறது.

உள்ளூர நோக்குவதானால், எங்கள் உறவுகள் தமது சொந்த ஊருக்குத் திரும்பும்போது, நிச்சயம் அங்கு குடியமர்த்தப்பட்டிருக்கும் பிற பிரதேசத்தவர்களுடன் வாழ வேண்டிய ஒரு சூழல் உருவாக்கப்பட்டுவிடும் என்பது தெரிகிறது.

அப்போது, அவர்களோ அவர்களுக்காகப் பேச வேண்டியவர்களோ அல்லது பேசுவோரோ எதுவும் செய்ய முடியாத கையறு நிலையிலேயே இருப்பர்.

இத்தகைய ஒரு பின்புலத்தில், எங்கள் மக்களை அவர்களது சொந்த மண்ணில் விரைந்து குடியேற்று வதில் முழுப் பங்களிப்பும் செய்யவேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு. இந்த வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவினர் இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா விடம் வன்னி மக்களின் மீளக் குடியமர்வில் இந்தியா முழு அக்கறை கொள்ள வேண்டும் என்று கேட்டிருப் பது மிகவும் பொருத்தமானதே.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர் முடிந்து விட்டதாகக் கூறிக்கொண்டு வன்னிப் பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களை அமைக்கும் முயற்சி யில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. மக்களின் மீள் குடியமர்த்தலில் முன் உரிமை காட்டப்படவில்லை என்று இந்திய அமைச்சரிடம் சுட்டிக் காட்டி வலியுறுத்தி யுள்ளனர் கூட்டமைப்பு தூதுக் குழுவினர்.

வன்னித் தமிழ் மக்களின் விரைந்த மீள் குடியேற்றத்தில் இந்தியாவுக்கு ஒரு தார்மீகப் பொறுப்பு உண்டு என்பதனை அந்த நாடு எந்தவிதத்திலும் மறுத்துக் கூற இயலாது. அரசியல் நடிகர், கலைஞர் தமிழக முதல்வர் கருணாநிதி இலங்கைத் தமிழர்களின் புனர்வாழ்வுக்காக ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்குமாறு மத்திய அரசிடம் கோரியதோடும், இந்திய மத்திய அரசு 100 கோடி ஒதுக்கியதோடும் வன்னியில் மீள் குடியேற்றம் நடத்து விடாது. அத்துடன் தமது பொறுப்புகள் கழிந்து விட்ட தாக மத்திய அரசு நினைக்கக் கூடாது.

வன்னிப் போரில் இலங்கை இராணுவம் வெற்றி ஈட்டுவதற்கு இருபது நாடுகள் தமக்கு உதவியதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம மிகப் பகிரங்கமாக நாடாளுமன்றத்தில் சில நாள்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார். ஆனால் அவர் அந்நாடுகளின் பெயர்களை வெளியிடவில்லை. அவர் அதனைத் தெரிவிக்காவிட்டாலும் அந்த இருபது நாடுகளின் வரிசையில் ''பெருமைக்குரிய'' முதலிடத்தைப் பெறுவது இந்தியாவே.

இதனை இலங்கை ஜனாதிபதி எல்லோருக்கும் முதலில் பகிரங்கப்படுத்திவிட்டார். இந்தியாவின் போரையே தாம் நடத்தி முடித்து வெற்றி கண்டதாக அவர் சொன்னார்.

அதனை உறுதி செய்யும் விதத்தில், இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவசங்கர் மேனன் மேலும் கனதி யாக வன்னியில் நடத்தப்பட்டது இந்தியாவின் போரே என்று ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார்.

ராஜீவ்காந்தி கொல்லப்பட்டதில் இருந்து புலிக ளுக்கு எதிரான யுத்தத்தை இந்தியா தொடர்ந்தது. இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தால் இந்தியா பாதுகாப்பான நாடாக இருக்க முடியாது. பயங் கரவாதம் எப்போதும் ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு அச் சுறுத்தலாகவே அமையும் என அவர் தெரிவித்துள் ளார்.

இதனை மென்மேலும் உறுதிப் படுத்தியுள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங். விடுதலைப் புலிகளின் பிரச்சினையைவிட ஈழத்தமிழர்களின் பிரச்சினையே பெரியதாகும் என்றும் அவர்களுக்குரிய அரசியல் தீர்வை வழங்குவதில் இலங்கை அரசு துணிச்சலுடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் ''புத்திமதி'' சொல்லி யுள்ளார்.

மொத்தத்தில் தமிழ்மக்கள் லட்சக் கணக்கில் மாண்டு போனதிலும், அகதிகளாக மாறியுள்ளதிலும் இலங்கை அரசைப் போன்று இந்திய அரசுக்கும் பங்குண்டு. அதற்குப் பிராயச்சித்தம் செய்யும் வகையிலேனும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்ட வல்ல அரசியல் தீர்வுக்கும், அகதிகளாக்கப்பட்ட வன்னி மக்கள் தமது சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழ்வதற்கு வழிசெய்யும் மீள்குடியேற்றத்துக்கும் இந்தியா முழுப்பங்களிப்பும் வழங்கவேண்டும்.

அதனை மனதார, நல்ல சிந்தையுடன் செய்வதற்கு இந்தியாவிக்குத் தார்மீகப் பொறுப்புண்டு. அதுவே தமிழர்களுக்குச் செய்த கேடுகளுக்கு ஒருவகைப் பிராயச்சித்தமாகவும் அமையும்.

# கூட்டறிக்கையில் வழங்கிய வாக்குறுதிகளை உடன் நிறைவேற்ற பான்கீ-மூன் வற்புறுத்தல்

## வரலாறு மீண்டும் திரும்பாமலிருக்க செயற்படக் கோரிக்கை

நியூயோர்க், ஜூன்13

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை முடித்த கையோடு கடந்த மாதம் இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கி-மூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இது விடயமாக தாம் இலங்கை ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை நாட்டுக்கு பான் கீ-மூன் மே 22, 23ஆம் திகதிகளில் விஜயம் ஒன்றை மேற்கொண்டதன் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையொன்றில் ஜனாதிபதி ராஜபக்ஷ ஒப்புக் கொண்டிருந்த கடப்பாடுகளை இப்பொழுது நிறைவேற்றத் தொடங்க வேண்டும் என செயலாளர் நாயகம் எதிர்பார்க்கின்றார்.

மோதலுக்குப் பிந்திய புதிய கட்டம் ஒன்றினை நாடு அடைந்துள்ளது. நிவாரணம், மறுவாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் மீள் இணக்கப்பாடு ஆகிய பல விடயங்களை நாம் எதிர்நோக்குகின்றோம் என்று ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அந்த வாக்குறுதிகளின் தொடர்ச்சியாக தாம் ஒரு கடிதத்தினை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எழுதியிருக்கின்றார் என்று நேற்றுமுன்தினம் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

### சர்வதேச சட்டங்கள் மீறப்பட்ட பிரச்சினை

மோதல்களின் இறுதிக் கட்டத்தில் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டிருக்கக் கூடிய தன்மைகள் குறித்து வெளிப் படையாகவும் பொறுப்பேற்கும் தன்மையோடும் விசாரணைகளை மேற் கொள்வது தொடர்பான வாக்குறுதிகளைக் குறிப்பாக நிறைவேற்றும் படி பான் கீ-மூன் இலங்கை ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்ளவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் நகரில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் பான் கீ-மூன் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான மோதல் முடிவுற்றதாக இலங்கை அரசாங்கம் அறிவித்ததன் பின்னர் ஐ.நா.செயலாளர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

மோதலின்போது ஏற்றுக்கொள்ள முடியாத அதிகளவில் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பது தொடர்பாக பான் கீ- மூன் மீண்டும் மீண்டும் தமது கவலையை வெளியிட்டு வந்துள்ளார். ஐ.நா.வேண்டுமென்றே புள்ளி விவரங்களைக் குறைத்து மதிப்பீடு செய்கின்றது என்ற குற்றச் சாட்டையும் அவர் திட்டவட்டமாக மறுத்திருந்தார்.



''மீள் இணக்கப்பாட்டு செயற்பாடுகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். வரலாறு மீண்டும் நிகழாமல் இருக்க வேண்டுமானால் தமிழ் சிறுபான்மையினரோடும் ஏனைய மக்களோடும் இலங்கை அரசு கைகோர்க்க வேண்டும். மீள் இணக்கம் தொடர்பான முதல் அடிகள் கட்டாயம் மீண்டும் சொல்கிறேன் கட்டாயம் இப்பொழுதே ஆரம்பிக்கப்பட வேண்டும்'' என்று பான் கீ-மூன் வலியுறுத்தினார்.

இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள முகாம்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவது தொடர்பாக தாம் எழுப்பிய கவலைகள் தொடர்பாக அரசு சில நடவடிக்கைகள் எடுத்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். போரின் காரணமாக இடம்பெயர்ந்தவர்களில் 80 வீதமானவர்களை வருட இறுதிக்குள் தம் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவிருப்பது குறித்தும் தாம் ஊக்கமடைந்திருப்பதாக மூன் தெரிவித்தார்.

# வெளிநாடுகளில் தங்கியுள்ள கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு நாடாளுமன்றம் மூன்று மாத கால விடுமுறை வழங்கியது

## பத்மினி சிதம்பரநாதன் நேற்று சபைக்கு சமுகமளித்தார்

கொழும்பு, ஜூன் 13

வெளிநாடுகளில் தற்போது தங்கியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரில் மூன்று பேர் தமது விடுமுறைக்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்ததையடுத்து அவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டது.

கடந்த 10 ஆம் திகதி குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் விடுமுறையை மேலும் நீடிப்பது தொடர்பான பிரேரணை சபையில் முன் வைக்கப்பட்டபோது ஆளும் தரப்பிலிருந்து எதிர்ப்புகளும் ஆட்சேபனைகளும் தெரிவிக்கப்பட்ட நிலையில் அது அனுமதிக்கப்படவில்லை.

இது தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை தனது முடிவை அறிவிப்பதாக சபாநாயகர் சபையில் அறிவித்திருந்தார்.

இந் நிலையில் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி (லண்டன்), செல்வராஜா கஜேந்திரன் (நோர்வே), செல்வம் அடைக்கலநாதன் (இந்தியா) ஆகியோர் தமது வைத்திய அறிக்கைகளை அனுப்பி வைத்திருந்தனர். இதனையடுத்து நாடாளுமன்றம் அவர்கள் மூவருக்கும் நேற்றிலிருந்து மூன்று மாதங்களுக்கு விடுமுறை வழங்கியது

மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான பத்மினி சிதம்பரநாதன் நாடாளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்த விடுமுறை முடிவதற்கு முன்னரே நேற்று நாடாளுமன்றுக்கு சமுகமளித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (50)

# பாஷையூர் அந்தோனியார் ஆலய பெருவிழாத் திருப்பலி இன்று

யாழ்.பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பெருவிழாத் திருப்பலி இன்று காலை 6.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை திருவிழாத் திருப்பலியைத் தலைமை தாங்கி ஒப்புக் கொடுப்பார்.

இன்று காலை 5.15 மணிக்கு முதல் திருப்பலி இடம்பெறும். மாலை 4.30 மணிக்கு புனித அந்தோனியார் திருச்சொரூப பவனி இடம்பெறும். (203-224)

(சிறப்புமலர் 8, 9 ஆம் பக்கங்களில்)

# சூரிய மின்கலம் பாவனை தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணத்தில் 'சூரிய மின் கலத்தின் பாவனையும் அதனை அமுல் படுத்தலும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் வடமாகாண நிலையத்தால் இன்று காலை 9.30 மணிக்கு இல. 474, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி.ரவிராஜன் கருத்துரை வழங்குவார்.

இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தின் வடமாகாண நிலையத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-9)

# நாளை

| | |
|---|---|
| வைகாசி 31 | 14.06.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | சஷ்டி |
| | மு.ப. 10.31வரை |
| நட்சத்திரம்: | சதயம் |
| | பி.இ.03.30 வரை |
| சுபநேரம்: | 08.53 - 10.23 |
| ராகுகாலம்: | 04.23 - 05.53 |

# இலங்கைக்கு சர்வதேச நிதி இப்போதைக்கு கிடைக்காது

## சிறிது காலம் எடுக்கும் என்கிறார் அகாஷி

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான சர்வதேச சமூகத்தின் நிதியுதவிகள் இப்போதைக்கு கிடைக்காது என்றும் அந்த நிதியுதவிகள் கிடைப்பதற்கு இன்னும் சிறிதுகாலம் எடுக்கும் என்றும் ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

''இலங்கையின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மற்றும் சமாதான அபிவிருத்திப் பணிகளுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக குறிப்பிட்ட முக்கிய முயற்சிகள் மேற் கொள்ளப்படலாம். எனினும் முதலில் யுத்தத்தினால் ஏற்பட்ட தூசி மண்டலம் அடங்க வேண்டும்'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2002ஆம் ஆண்டின் சமாதான உடன்படிக்கையில் உறுதியளிக்கப்பட்டபடி 450 கோடி டொலர் நிதியுதவி கிடைப்பதற்கு ஏனைய நாடுகளுடனும் அமைப்புகளுடனும் தொடர்ச்சியான பேச்சுக்கள் அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அன்னையே! எமக்கினி யார்தான் தஞ்சம்?



பண்ணிறை பவளச் செவ்வாய்
பவள மா மேனியோடு
வண்ணமா கோபுரம் சூழ்
வனப்புறு கோவில் தன்னில்
அன்னையே! நீயும் வந்து
அமர்ந்தனை அரசு ஓச்ச
கண்கவர் வெண் கொடியையயின்று
கருத்துடன் ஏற்றுகின்றார்
எண்ணரும் கவலைமேவ நின்தன்
இணையடி வேண்டுகின்றார்
அன்னை நீ உலகிற்கெல்லாம்
ஆதலால் ஒன்று கேட்பேன்
இன்னமும் துயரே என்றால்
எமக்கினி யார்தான் தஞ்சம்?

-விகடகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி ரூபினி வரதலிங்கம்,
(இலங்கை நிர்வாக சேவை,தரம்-1)
வலி. தென்மேற்குப் பிரதேச செயலராக பணியாற்றி தன்னலமற்ற உயரிய சேவையால் மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்றிருக்கும் திருமதி ரூபினி வரதலிங்கம் அவர்கள் எல்லா நலன்களும் பெற்று யாழ்.மாவட்ட மக்கள் மனம் மகிழ சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

ச. சிவகுமாரன்-தலைவர்,
யாழ். மாவட்ட மூத்தபிரஜைகள் பேரவை.

## ஆசிரியர் செயலமர்வு

யாழ்.கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 11இல் வரலாற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயற்றிட்ட செயலமர்வு நாளை காலை 8.30 முதல் 4.30மணி வரை வலய ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனை பிதாவானவர் கனம்பண்ணுவார்"
யோவான் 12:26

## திருநிலைப்படுத்துதல் ஆராதனை

இன்று (13.06.2009) சனிக்கிழமை மாலை 3 மணியளவில் எபநேசர் ஜெப ஆலயத்தின் தேவ ஊழியர்களாகிய சகோ. சண்முகநாதன், தினேஸ்கரன் (லூக்), அவர்களைப் போதகராக திருநிலைப்படுத்துவதோடு, சகோ. மாணிக்கம் மதிதாஸன் அவர்களை மூப்பராகவும் நியமிக்கவுள்ளோம் என்பதனை அனைத்து சபையாருக்கும் அறியத்தருவதோடு, யாவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

எபநேசர் ஜெப ஆலயம்,
வட்டுக்கோட்டை.

போதகர்கள், ஊழியர்கள்
மூப்பர்கள், விசுவாசிகள்.

ஸ்ரீ ஐங்கரன் துணை

## விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்!

நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ மங்களகரமான விரோதி வருஷம் வைகாசித் திங்கள் 31 ஆம் நாள் (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை சித்தயோகமும் சப்தமி திதியும், சதய நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் பகல் 12.00 மணிமுதல் 01.00 மணிவரையுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில்

அளவெட்டி கும்பழாவளை
சிவஸ்ரீ இராமலிங்க ஐயர் தம்பதிகளின்
பௌத்திரியும்,
எமது ஜேஷ்ட புத்திரியுமாகிய சௌபாக்கியவதி
**சூரியகலாவை**
*(அனுஶியா)*
B.A. Dip. in Music

அளவெட்டி பெருமாக்கடவை
சிவஸ்ரீ சண்முகக் குருக்கள் தம்பதிகளின்
பௌத்திரனும், எமது ஜேஷ்ட புத்திரனுமாகிய
சிரஞ்சீவி
**பிரம்மஸ்ரீ**
**ராதாகிருஷ்ணசர்மாவிற்கு**
B.A. (Hons) Tamil

கன்னிகாதான மாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்து கொடுப்பதற்கு அளவெட்டி பெருமாக்கடவை , சித்தி விநாயகர், கும்பழாவளை விநாயகர், சிங்கப்பூர் செண்பக விநாயகர் திருவருள் துணையுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் கொழும்பு-11, கதிரேசன் வீதி, வீர மயிலன் கல்யாண மண்டபத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்துக்களுடன் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: 14.06.2009, காலை 6.00 மணிக்கு செட்டித்தெரு புதிய கதிரேசன் கோவிலில் இடம்பெறும்.

தங்கள் நல்வரவை நாடும்


சிவஸ்ரீ இராம சூரியப்பிரபாகரக் குருக்கள்
பாலகௌரி தம்பதிகள்
ரீபூலிப், 2/4, வி.ரி.வி தொடர்மாடி
கொழும்பு-13, தொலைபேசி: 011-2387678

சிவஸ்ரீ சண்முக பரமேஸ்வரக்குருக்கள் கௌரி தம்பதிகள்
அடுவம்பற்று அளவெட்டி தெற்கு, அளவெட்டி
(முத்து விநாயகர் கோவில், செட்டித் தெரு, கொழும்பு-11)
தொலைபேசி: 011-2424018

*(இருவீட்டார் அழைப்பு)*

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
01
★
12
★
1957



உதிர்வு
14
★
05
★
2009

அமரர்

**கிருஷ்ணபிள்ளை நித்தியானந்தன் (ஆனந்தப்பா)**

கடந்த (14.05.2009) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் கி.நித்தியானந்தன் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (13.06.2009) சனிக்கிழமை மு.ப 11 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (86186) குடும்பத்தினர்

## துயர் பகிர்வும் 31ஆம் நாள் நினைவலைகளும்



வலி.கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் உபஅலுவலக பொறுப்பதிகாரி
திருமதி கோமளாவல்லி தமிழ்செல்வன்
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி மகேஸ்வரன் பரமேஸ்வரி**
அவர்கள் கடந்த 13.05.2009 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி.கிழக்குப் பிரதேச சபை,
புத்தூர். (சி/558976) ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
15.06.1962



விண்ணில்
26.05.2008

**அமரர் கதிரவேலு நாகேஸ்வரன் (சந்திரன்)**

*திதி: 13.06.2009*

அன்பின் சிகரமே! பாசத்தின் உறைவிடமே!
நீங்காத உங்கள் நினைவலைகள்
நிழலாக இன்றும் தொடருதையா!
மெழுகுவர்த்தி தன்னை உருக்கி ஒளி கொடுத்தாற்போல்
நீங்கள் உங்களை உருக்கி எம் வாழ்வை உயர்த்தி வைத்தீர்!
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து ஓராண்டு கடந்ததுவே
ஆனாலும் எமது இதயக் கோயிலிலே என்றும் நீர் குடியிருப்பீர்
உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன். (C/558977) மனைவி, பிள்ளைகள்.

## ஊர்காவற்றுறையில் இன்று கல்லூரி தினம்

ஊர்காவற்றுறை, ஜூன் 13

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் கல்லூரி தினம் இன்று சனிக்கிழமை காலை கல்லூரி அதிபர் அருட்திரு. ஜேம்ஸ் சிங்கராஜர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வை ஒட்டி பாடசாலையில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன. (1-127)

## அறநெறிப்பாடசாலையின் நிறைவு விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

இணுவில் சைவத்திருநெறிக்கழகம் நடத்தும் சிவகாமி அறநெறிப்படாசாலையின் பதினோராவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் 'ஈழத்து சக்தியின் அற்புதங்கள்' நூல் வெளியீடும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சிவகாமி அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் கெ.தவராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும் நூல் நயப்புரையை பேராசிரியர் கலைவாணி இராமநாதனும் நிகழ்த்துவர். (1-204)

## வெளிவந்துவிட்டது

தரம் - 8 புவியியல் (புதிய பாடத்திட்டம்)
ஆசிரியர் - திரு.சி.காலேஸ்வரன்
கிடைக்குமிடங்கள்-பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
சுப்பிரமணியம் புத்தகசாலை
லங்கா புத்தகசாலை
பொதிகை (சாவகச்சேரி)

- குறிப்புகள்
- வினாவிடைகள்
- விளக்கப்படங்கள்

## இறைச்சிக்கோழி விற்பனை

நிறை கூடிய தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

செம்மணிபாம்,
77/3,செம்மணிவீதி, நாயன்மார்க்கட்டு.

## விற்பனைக்கு

உரும்பிராய் பலாலிறோட்டில், கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கும் உரும்பிராய் சந்திக்குமிடையில் 50ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள 2½பரப்புக் காணி கிணற்றுடன் கூடிய கல்வீடு விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்
337 1/1, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம். T.P 0777 551431

## மலேசியாவில் வேலைவாய்ப்புக்கள்

பங்கெல வீட்டு வேலைக்கு பணிப் பெண்கள் தேவை பயணம் இலவசம்
தோட்டத்தில், உணவகத்தில்,
தொழிற்சாலைகளில் அனைத்து வேலைகளுக்கும் ஆண்,பெண் பணியாளர்கள் தேவை
உடன் பயண ஏற்பாடுகள்.

தொடர்பு: 0718293011

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வைத்தீஸ்வரா வீதி, உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது மைத்துனன்
**சண்முகநாதன்**
**தினேஸ்கரன் (லூக்)**
அவர்கள் இன்று (13.06.2009) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட்டுக்கோட்டை எபநேசர் ஜெப ஆலயத்தில் "போதகராக" திருநிலைப்படுத்துவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அத்துடன் கடவுளின் திருப்பணியைச் சிறப்பாக மேற்கொள்ளவும் மேன்மேலும் பல உயர்வினைப் பெறவும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
திரு திருமதி க. பாலகிருஷ்ணராசா குடும்பம்
திரு திருமதி த. சமலநாதன் குடும்பம்.
திரு திருமதி சி. மகேஸ்வரன் குடும்பம்
திரு திருமதி அ. இந்திரராசா குடும்பம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (86190)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து தற்போது கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் அதிபராகப் பதவி உயர்வு பெற்று பொறுப்பேற்று இருக்கும்
**கார்த்திகேய ஐயர்**
**சசிதரன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

கோபாலசர்மா பவானி, கோ.கம்ஷெத்வனி (மாணவி, கிழக்குப் பல்கலைக்கழகம், திருமலை), கோ.ரகுவரன் (மாணவன் யாழ்.பல்கலைக்கழகம்).

கந்தரோடை,
சுன்னாகம். (86162)

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.

**Diploma in Computerized Accounting**
உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான
**Quick Book + ACCPAC + MYOB**
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

**Diploma in Graphic Designing**
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
**Adobe Photo shop+Corel Draw Macro Media Flash+Cool 3D Studio**

**Diploma in Hardware Engineering**
**Assembling+Upgrading+Troubleshooting+Repairing Servicing+Software Installation+Config Networking Ect..**

**Diploma in Video Editing**
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
**Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter Capturing+Pinnacle Studio+Adobe premeir**
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

வகுப்புக்கள் ஆரம்பம்:- **15.06.2009 9.00Am**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'யோகி ஹோம் சயன்ஸ்' அக்கடமியில் நேற்று 'கேக்ஐசிங்' கண்காட்சி யாழ்.அரச அதிபர் கே.கணேஷால் நாடாவெட்டி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

அக்கடமி நிர்வாகி திருமதி யோகினி சண்முகநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கண்காட்சி மண்டபத்தை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். கண்காட்சியை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு ஆகியோர் பார்வையிடுவதை ஏனைய படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

# இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் தன்னியக்க பணமாற்று சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் நேற்றுமுன்தினம் வியாழன் தன்னியக்க பணமாற்று சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் எஸ்.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கள விளக்கை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம், தென்மராட்சி பிரதேச செயலர் செ.சிறீனிவாசன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், கைதடி குருசாமி வித்தியாலய அதிபர், எஸ்.பவனகுமார் வாடிக்கையாளர் சார்பில் பி.சுந்தரலிங்கம், கணக்காளர் எஸ்.செந்தூரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து வாடிக்கையாளர் சார்பில் வ.ஸ்ரீபிரகாஸ், தென்மராட்சி பிரதேச செயலர் செ.சிறீனிவாசன், தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேம காந்தன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை, இலங்கை வங்கியின் யாழ்.கிளையின் உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்கள், வர்த்தகர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.சந்திரகுமார் தலைமையுரை நிகழ்த்துகையில்:

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையானது மக்களுக்கு சேவை செய்யும் நோக்கில் பல திட்டங்களை மக்கள் மத்தியில் விரிவாக்கி வருகின்றது. அதனடிப்படையில் இச்சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார் (203-131-201)

## மரக்கறிச் செய்கைக்கு தேவையான விதைகள் உற்பத்தி

அடுத்த போகத்துக்கான மரக்கறிச் செய்கையை மேற்கொள்வதற்கென மரக்கறி விதைகளை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று குடாநாடு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் மரக்கறிச் செய்கைக்கான மரக்கறி விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன,

அதனைவிட அடுத்த போகத்திற்குத் தேவையான மரக்கறிச் செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான மரக்கறி விதைகளை உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (203-224)

# பொலிஸார் தேடிவந்த சந்தேக நபர் வீதியில் துரத்திப் பிடிக்கப்பட்டார்

வலி.வடக்கு, ஜூன் 13

நீண்டகாலமாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் வீதியில் துரத்திச் செல்லப்பட்டுக் கைது செய்யப்பட்டார்.

ஒருவரை அடித்துக் காயப்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் நீண்டகாலமாகத் தலைமறைவாக இருந்து வந்துள்ளார்.

எனினும், தொடர்ந்து குறித்த நபரைத் தேடிவந்த பொலிஸார் சுன்னாகம் சந்தைப் பகுதியில் அவரைக் கண்டுள்ளனர்.

பொலிஸாரைக் கண்டதும் குறிப்பிட்ட சந்தேக நபர் வீதியால் ஓட முற்பட்டுள்ளார்.

இவரைத் துரத்திச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பொலிஸார் ஆஜர் செய்தனர். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் அவரை இருவாரத்துக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.(203-86)

## பால் விற்பனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

கோப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்தின் பால் விற்பனை நிலையத்தில் ஒரு நாளைக்கு குறைந்தது 700 லீற்றர் வரையில் பசுப்பால் விற்பனையாகிறது என்று சங்கத்தின் தலைவர் கே.சிவபாலன் தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் தற்போது பசுப்பால் விற்பனை திடீரென அதிகரித்துள்ளது.

அதனைவிட சமுர்த்தி முத்திரை பெறும் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள குடும்பங்களில் நான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கும் பசுப்பால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்று அவர் மேலும் கூறினார். (203-224)

## நன்னடத்தை உத்தியோகத்தர் நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடமாகாணத்தில் உள்ள பிள்ளைகளுக்கு நலன்புரி வசதிகளை வழங்குவதற்கு தொண்டர் நன்னடத்தை உத்தியோகத்தர்களை ஆள்சேர்ப்பதற்கு நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் உரிய அத்தாட்சிப் பத்திரங்களுடன் சமுகமளிக்குமாறு பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார்.

இந்த நேர்முகத் தேர்வு சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம், வரோதயா நகர், கன்னியா வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(203-204)

# திருடிய மோட்டார் சைக்கிளையும் போட்டுவிட்டு ஓடினர் மூவர்

### ஒருவர் படையினரால் மடக்கிப்பிடிப்பு

வலி.வடக்கு, ஜூன் 13

படையினரைக் கண்டதும் திருடிய மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு ஓடிய சந்தேச நபர்களில் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவந்துள்ளதாவது:

கோண்டாவில் மேற்கு உப்புமடம் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழாவின்போது ஆசிரியர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயிருந்தது.

மறுநாள் குறிப்பிட்ட மோடடார் சைக்கிள் இலக்கத்தை அகற்றிவிட்டு குறித்த மோட்டார் சைக்கிளில் மூவர் பயணம் செய்துள்ளனர்.

வீதியில் வந்துகொண்டிருந்த படையினரைக் கண்டதும் மூவரும் இறங்கி ஓடத் தொடங்கினர்.

சந்தேகம் கொண்ட படையினர் ஓடியவர்களில் ஒருவரை துரத்திப்பிடித்து விசாரித்தபோது குறித்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது என்ற உண்மை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அந்த நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (203-86)

# உயிர் காக்கும் உன்னதமான பணி குருதிக் கொடை

நாளை ஜூன் 14 ஆம் திகதி ஒரு சிறப்பான நன்னாள். குருதிக் கொடை மூலம் உயிர்காக்கும் உன்னத பணியினை மதிக்கும் நாள். தொடர்ந்தும் எம் ஆயுள் வரை இவ்வுயிர் காக்கும் பணியினை செவ்வனே செய்வோம் என உறுதியெடுக்கும் நாள்.

தரணியில் தானங்களில் சிறந்தது இரத்ததானம். இவ்வுயரிய தர்மத்தை தற்செயலான ஒரு செயற்பாடாகக் கருதாது சுய கௌரவத்திற்காகவோ, விளம்பரத்திற்காகவோ அன்றி தமது சமூகக் கடப்பாடாகவே எண்ணி இந்தத் தானத்தில் தம்மை இணைத்துக் கொண்ட குருதிக் கொடையாளர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். அவர்கள் சேவையினை இந்நாளிலே நினைவு கூர்வது ஒவ்வொரு பிரஜையினதும் கடப்பாடாகும்.

ஒருவரின் உடலில் இருந்து மொத்தக் குருதியில் 20% க்கும் அதிகமான குருதி சடுதியாக வெளியேறுமாயின் அது மரணத்துக்கே இட்டுச்செல்லும். இவ்வாறான பாரிய குருதி இழப்புகள், வீதி விபத்துகள், பிரசவ காலத்தில் ஏற்படும் குருதி இழப்புகள், யுத்த காலத்தில் ஏற்படும் காயங்கள் மூலம் ஏற்படுகின்றன. இவை பொதுவாக இளம்பிராயத்தினரது உயிர்களையே பறிக்கின்றது. இரத்த இருப்பை உறுதி செய்வதன் மூலம் தடுக்க முடியும். எனவே தொடர்ச்சியாக இரத்ததானம் செய்து இவர்களைக் காப்பாற்ற வேண்டியது எமது கடமை.

புற்று நோய்க்கு அளிக்கும் சிகிச்சையின் போதும் குருதிக் கலங்களின் உற்பத்தி குறைவடைவதனால் பெரும்பாலானவர்களுக்கு குருதி தேவைப்படுகின்றது. இத்தேவையை சரியான முறையில் பூர்த்தி செய்யாவிட்டால் அவர்களின் இறப்பு தவிர்க்க முடியாததொன்றாகிவிடும். இவர்களைக் காப்பாற்ற வேண்டியது எமது சமூகப் பொறுப்பல்லவா?

குருதியானது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் மட்டுமே சேமித்து வைக்கக் கூடியது. எனவே போதியளவு குருதியின் கையிருப்பை எந்த நேரத்திலும் எவ்விடத்திலும் உறுதி செய்வதற்கு உரிய வகையில் ஆரோக்கியமுள்ள தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் குறித்த கால இடைவெளியில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்ய வேண்டிய தேவைப்பாடுள்ளது. பாரதூரமான நோய்களற்ற 50 கிலோ உடல் நிறையிலும் கூடிய 18 தொடக்கம் 60 வயதிற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் 4 மாதத்திற்கு ஒரு தடவை இரத்த தானம் செய்யலாம்.

ஒருவர் குருதி வழங்க முன்பு அவரிடம் சில கேள்விகள் கேட்பது வழக்கம். இதன் மூலம் அந்நபரின் மருத்துவ நிலை, தற்போதைய ஆரோக்கியம், [illegible] என்பன அறியப்படுகின்றன. இக்கேள்விகளினால் இரத்தம் கொடுப்பவர்கள் மட்டுமல்ல பெறுபவர்களும் நன்மையடைகின்றனர். இக்கேள்விகளிற்கு உண்மையான பதிலை வழங்குவதன் மூலம் குருதியின் மூலம் பரவும் நோய்களைத் தடுக்க முடியும். அத்துடன் இப்பதில்கள் மருத்துவ மரபிற்கமைய இரகசியமாகவும் பேணப்படும். எனவே ஒழிவு மறைவின்றி உரிய உத்தியோகத்தரிடம் தெளிவான பதில்களைக் கூறவேண்டிய கட்மைப்பாடுள்ளது. பின்னர் குருதிக் கொடையாளர் மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவார். இதன் மூலம் ஒருவர் முதன்முதலாகவோ அல்லது தொடர்ச்சியாகவோ இரத்ததானம் செய்ய வரும்போது அவர்களுக்கு எதுவித பாதகமான விடயங்களும் ஏற்படாமலிருப்பதை இரத்த வங்கி உறுதி செய்து கொள்கின்றது.

இதன்பின் குருதி பெறப்படும் பகுதி சுத்தம் செய்யப்பட்டு கிருமித்தொற்றற்ற ஊசிமூலம் பைகளில் குருதி சேகரிக்கப்படும். இதற்கு 10 நிமிடங்கள் மட்டும் தேவைப்படுகின்றது. பொதுவாக ஒருவரில் ஒருதடவை 450 மில்லி லீற்றர் குருதி மட்டுமே பெறப்படுகின்றது. இது அவரின் உடலிலுள்ள குருதியில் 1/10 பங்காகும். குருதி வழங்கிய பின் 10 தொடக்கம் 15 நிமிடங்கள் ஓய்வெடுக்க வேண்டும். இதன்போது பானங்கள் பருகி சிற்றுண்டிகள் உண்ணலாம். பின்னர் கொடையாளி அன்று மட்டும் பாரிய கடின வேலைகள் தவிர்ந்த சாதாரண வேலைகளில் ஈடுபடலாம். அடுத்துவரும் 24 மணித்தியாலங்களுக்கு போதியளவு நீராகாரம் அருந்த வேண்டும். குருதி வழங்கியவர்கள் பிரத்தியேகமான போசாக்கான உணவை உட்கொள்ளத் தேவையில்லை. சாதாரண உணவு உள்ளெடுப்பே பழைய நிலையை அடையப் போதுமானது.

**Dr.செல்வி ச.சிந்துஜா**
**வைத்திய அதிகாரி, இரத்த வங்கி,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

இரத்ததானம் செய்ய விரும்பும் நிறுவனங்கள், கழகங்கள் எம்முடன் எந்நேரம் தொடர்பு கொண்டாலும் நாம் அவர்களது பிரதேசத்தில் மக்கள் மத்தியில் இரத்ததானம் பற்றிய கருத்தரங்குகளை நடத்த இலகுவாக வழிசமைப்போம். எனவே எமது பிரதேசத்திலுள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகம், கல்வி நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், சமூக நற்பணி மன்றங்கள், சமய நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் அனைவரும் எம்முடன் இணைந்து உதிரம் தந்து எம் முறவுகளின் உயிர் காக்கும் உத்தமமான பணியை நாளைய தினத்திலேயே தங்களது சமூகக் கடமையாகச் செய்ய அன்பாக அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அஞ்சல் பயிற்சிக் கல்லூரி அடுத்தவாரம் திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூன்13

யாழ்.பிரதம தபாலகத்தில் அஞ்சல் பயிற்சிக் கல்லூரி அடுத்த வாரமளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான முழு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பயிற்சிக் கல்லூரிக்குத் தேவையான கணனிகள் மற்றும் பொருள்கள் அனைத்தும் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

அடுத்த வாரத்தில் யாழ்ப்பாணம் வருகைதரும் அஞ்சல்மா அதிபர் இப்பயிற்சிக் கல்லூரியைத் திறந்துவைப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (203-224)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 . 03 . 1931



மறைவு 14 . 05 . 2009

### திருமதி நாகலிங்கம் நாகம்மா

*அன்பின் உருவமாய் பாசத்தின் பிறப்பிடமாய்*
*உற்றார், உறவினர்களை அன்புடன் அரவணைத்து*
*அன்பு சொரிந்து அகமகிழ்ந்து அனைவரினதும்*
*உள்ளங்களிலும் நீங்கா இடம் பெற்ற தாயே!*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

(86165)

பிள்ளைகள்,
சகோதரர்கள்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 05 . 1960



மறைவு 13 . 06 . 2007

### திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி கொன்செப்ரா

ஆறவில்லை தாயே எங்கள் இதயம்
ஆற்றொணா துயர் நிறைந்த காயம்
இனி நாம் வாழ்ந்திடும் காலமெல்லாம்
மறப்போமா உங்கள் அன்பு முகத்தை
ஆசையாய் எம்மை பெற்று வளர்த்து
சிறப்பாய் அறிவும் அழகும் புகட்டி
வளமுடன் வாழவைத்த அன்னையே!
தெய்வத்துள் நீர் நிறைந்திட்டாலும்
வையத்துள் வாழும் நாம்
நித்தமும் நினைந்தே வாழ்வோம்
தெய்வம்போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எம்மைக் காப்பீர்கள் அம்மா!

(86174)

இல.137,
3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்,
குடும்பத்தினர்.

## மோதலில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து அரசு விசாரணைகளை மேற்கொள்வது சந்தேகமே

### சர்வதேச மன்னிப்புச் சபை கருத்து

கொழும்பு,ஜூன்13

இலங்கையில் தசாப்தகாலமாக மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. இதன் காரணமாக சமீபத்தைய மோதலின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து அரசு விசாரணைகளை மேற்கொள்ளுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

- இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கையின் அரசுகள் பல வருடங்களாக மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பேற்கவில்லை என குற்றம்சாட்டியுள்ள மன்னிப்புச் சபை, இதுகுறித்து மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு -

இலங்கையில் காணாமற் போனவர்கள் உட்பட ஏனைய பாரதூரமான மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்காக 1991இற்குப் பின்னர் ஒன்பது விசாரணை ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விசாரணை ஆணைக்குழுக்கள் நம்பகத்தன்மை அற்றவையாக காணப்படுவதுடன், குற்ற விசாரணைகளை தாமதப்படுத்தியுள்ளன.

அரசுகள் பாதிக்கப்பட்டவர்களையும், சாட்சியங்களையும் காப்பாற்றத் தவறியுள்ளதுடன், குற்றவாளிகள் என காண்ப்பட்ட சிலரை நீதியின் முன்நிறுத்தவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ 1991இல் முதலாவது ஆணைக்குழுவை ஏற்படுத்தினார்.

இதற்குப் பின்னர் ஒன்பது விசாரணை ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் குற்றவாளிகளை இனம் கண்டுள்ளபோதிலும் எவரும் தண்டிக்கப்படவில்லை.

இலங்கை அரசுகள் கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்கள் குறித்து மேற்கொண்ட விசாரணைகளின் பெறுபேறுகளை அடிப்படையாக வைத்து நோக்கும்போது, சமீபத்தில் இடம்பெற்ற உரிமை மீறல்கள் குறித்து அரசு தனது சொந்த விசாரணைகளை மேற்கொள்ளுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சமீபத்தைய மோதலில், குறிப்பாக கடந்த சில மாதங்களாக இரு தரப்பும் இழைத்த மனித உரிமை மீறல்களை பொதுமக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

தசாப்தகால வன்முறை மற்றும் சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதல் என்பனவற்றால் மிக மோசமாக பிளவுபட்டுள்ள சமூகங்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கு இலங்கை அரசு உள்ளக சீர்திருத்தங்களை முன்னெடுப்பதுடன், தொடரும் உரிமை மீறல்களுக்கு முடிவு கட்டுவதற்கும் கடந்த கால துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்பேற்பதற்கும் சர்வதேச உதவியை நாடவேண்டும்.

உடனடி தேவையாக இலங்கையில் இடம்பெற்ற மிக மோசமான மனித உரிமை மீறல் குறித்து விசாரிப்பதற்கு சர்வதேச சுயாதீன ஆணைக்குழுவை ஏற்படுத்த வேண்டும்.

பொதுமக்களுக்கு எதிராக உரிமை மீறல்களில் ஈடுபட்ட விடுதலை புலிகள் அதற்கு பொறுப்பேற்பதில் அரசு சிறிதளவு வெற்றியை காணவில்லை.

இலங்கை அரசு தனது சொந்த படையினரை விசாரணை செய்து தண்டிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே தென்படுகின்றன - என்றுள்ளது. (சி)

**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
இல.19, முருகேசர் லேன், நல்லூர்.

**ஒத்துமாறல்**

மேல்மாகாணத்தில் கணித பாடம் கற்பிக்கும் B.Sc. பட்டதாரி ஆசிரியர் வடமாகாணத்திற்கு இடம்மாற விரும்புகிறார்.

*தொடர்புகளுக்கு:*
077 3593098


(C558954)

## IN MEMORIAM

### 100th Birth Day

### Late V.M.CUMARASWAMY

(Retd. District Judge, Mallakam)



திரு.திருமதி வி.எம். குமாரசுவாமி

13.06.2009

மல்லாகம்.

விஸ்வலிங்கம் குடும்பம் [மகன்],
உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிசைச் சங்கமமும் இசை நடனச் சங்கமமும்


-நர்த்தகன்.

## ஒரு மீள்பார்வை

(இதன் முதற் பகுதி கடந்த வார உதயனில் வெளியாகியிருந்தது)

ஒரு பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் எந்த ஒரு கலை, கலாசார இலக்கியக் கோட்பாடுகளும் அதனை முன்னெடுக்கும் அமைப்பும் அப்பகுதி சமூக, பொருளாதார, கலை கலாசார, இலக்கிய வரலாற்று வளர்ச்சிக்கு - அப்பாற்பட்டதாக அமைந்து கொள்வதில்லை. அவற்றை உள்வாங்கிக் கொண்டு தத்தமது நிலைக் களங்களுக்கு ஏற்ப கலை கலாசார இலக்கிய அமைப்புக்களும், வாதிகளும் செயலாற்றுவர். இத்தகைய ஒரு வரலாற்று வளர்ச்சியின் தேவை காரணமாக ஒரு அமைப்பு ரீதியாக தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் தோற்றம் பெற்று புத்துயிர் பெற்றதே சாவகச்சேரி நகர் கலா மன்றமாகும். இதன் செயற்பாட்டுக் குழுத் தலைவராக பதிவாளர் க.மோகன ராஜலிங்கமும் செயலாளராக ஓய்வுபெற்ற கிராம அலுவலர் வை.இராசரத்தினமும் கலை உணர்வுடனும் அர்ப்பண சிந்தையுடனும் முன்னின்று மாதாந்த கலை நிகழ்வுகளை நடத்தி வருகின்றார்கள். கடந்த 09.11.2008 இல் கலை மன்ற ஆதரவில் 4ஆவது நிகழ்வாக கலாபூசணம் அ.கி.ஏரம்பமூர்த்தி ஆசிரியர் எழுதிய 'கீர்த்தனா மிர்த சாகரம்', 'மழலைகள் கீத மாலை ' நூல் வெளியீடும் இசை நடன சங்கமமும் மீசாலை சிவசக்தி சங்கீத நர்த்தனாலயத்தினரால் நடத்தப்பட்டது.

தலைமையுரை ஆற்றிய பதிவாளர் க.மோகனாராஜலிங்கம், கடந்த மூன்று நிகழ்வுகளை விட இன்றைய நிகழ்வுக்கு மகுடம் சூட்டி வைத்தாற் போல ரசிகர்கள், பார்வையாளர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், மாணவிகள் என மண்டபம் நிறைவாகக் கூடியிருந்ததை சுட்டிக்காட்டியிருந்தார். ஓய்வுபெற்ற கிராம அலுவலர் திரு இராசரட்ணம் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து பிரதம விருந்தினரும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமான கு.பிரேமகாந்தன் அவரர்கள் தமது உரையில் இன்று இந்த மண்டபத்தைப் பார்க்கும் பொழுது மாணவ, மாணவிகள், படிக்க நேரமில்லை என்றவர்கள் பிற்பகல் வரை மண்டபத்தில் இருக்க இடமில்லாது நின்ற நிலையில் ஆர்வத்துடன் பார்த்து இரசிக்கும்போது மிக்க மகிழ்ச்சியாக இருப்பதாக குறிப்பிட்டார். இசையாசிரியர் பொன்.ஶ்ரீவாமதேவன் அவர்களின் நூல் வெளியீட்டுரையைத் தொடர்ந்து நூல் முதற்பிரதியை நூலாசிரியரின் நண்பரும் உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபருமான திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்கள் பெற்றுக்கொள்ள மதிப்புரையில் முன்னாள் பேராசிரியர் வி.சிவசாமி, இந்த நூலில் பெரும்பாலான பாடல்கள் புனித தலங்களையும் தெய்வங்களின் மகிமைகளையும் ஆற்றல்களையும் கீர்த்தனை வடிவில் இசைநயம், சொற்கட்டு, தாளக்கட்டுடன் அமைக்கப்பட்டமை நூலாசிரியர் இசைப்புலமையையும் அவரது ஆன்மீக நெறி வாழ்வையும் எடுத்துக்காட்டுகிறது என்றார். மழலைகள் கீதமாலை நூலின் மதிப்பீட்டுரையில் ஆசிரியர் சி.மார்க்கண்டு அவர்கள் சிறுவர்கள் வாசிக்கக்கூடியதாக, இலகு தமிழில், சிறு சிறு சொற்களாகப் பாடி, ஆடி மகிழ ஜனரஞ்சகமான ராகங்களில் இசையமைக்கக் கூடியதாக பாடல்கள் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

சிறப்புரைகளின் இடையே கலை நிகழ்வுகள் மற்றும் பல நிகழ்வுகள் இடம் பெறக்கூடியதாக ஒழுங்கமைத்து மண்டபத்தில் சகலதர ரசிகர்களின் மனதையும் கவர்ந்து விழா முடிவுபெறும் வரை மிக்க ஆர்வத்துடன் இருந்து பார்த்ததை காணக்கூடியதாக இருந்தது. இசை நடன நிகழ்வுகளை நெறிப்படுத்திய மீசாலை சிவசக்தி சங்கீத நர்த்தனாலய இசை, நடன ஆசிரியைகள் திருமதி ஈழநேசன் புனித குமாரி, திருமதி ஶ்ரீரவிகுலன்- விமலகுமாரி ஆகியோருடன் அணிசெய் கலைஞர்களாக மிருதங்கம் எஸ்.மகேந்தி ரன் ஆசிரியர் அவர்களும் வயலின் க.குருபரன் ஆசிரியர் அவர்களும் இணைந்து, ஒப்பனை அலங்காரம், ஒலியமைப்பும் சிறப்புற அமைத்து ஒவ்வொரு நிகழ்வும் புத்துணர்வையும், புதுத்தென்பையும் ரசிகர்களின் முகங்களில் காணமுடிந்தது. தனிநடனம், குழுஇசை நிகழ்வில் பங்குபற்றிய சிறுமி, சிறுவர்களின் எதிர்கால இளங் கலைஞர்களின் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் கவர்ந்ததோடு அன்றைய இறுதி நிகழ்வான 'கலியினால் நாடிழந்த காவலன்' நாட்டிய நாடகத்தின் பிரதி ஆக்கம், பாட்டு, நட்டுவங்கம் , பங்குபற்றிய மாணவ மாணவிகளின் நடிப்பு வெளிப்படுத்துகை, ஒப்பனை அலங்காரம், பக்கவாத்தியம் என்பன சிறப்பாக அமைந்தது. சிறப்பு விருந்தின ர்களதும் ரசிகர்களதும் பெற்றோரினதும் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பகிர்ந்து மகிழ்வடைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இதனைப் பார்க்கும் போது பல வளம் கொளிக்கும் தென்மராட்சில் கலைவளம் மீண்டும் களைகட்ட ஆரம்பித்துள்ளதையும், இது தான் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு அடித்தளமாகவும், ஆதார சுருதியாகவும் அமையும். கலைகளின் பங்களிப்பென்பதை நாம் நன்குணர்ந்து கொள்ளவேண்டும்.

[முற்றும்]

# இயற்கையும் மனிதனும் காலநிலை மாற்றமும்

சு.சிவநேசராசன்,
ஆசிரியர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களில் பூமியில் மட்டுமே உயிரினங்கள் வாழ்கின்றன என்று இதுவரை அறியப்பட்டுள்ளது.

* பூமியில் இயற்கையாகவே உள்ள வளிமண்டல அமைப்பு
* திரவநிலையில் உள்ள நீர்
* சிறப்பான வெப்பநிலை

போன்ற காரணிகளால் பூமியானது உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த இயற்கைச் சூழலை கொண்டிருக்கின்றது என்பது உயிரியலாளர்களின் கருத்து ஆகும்.

அத்துடன் உயிரினங்கள் வாழ்வதற்கு மிகவும் உகந்த இதுபோன்ற இயற்கை அமைப்பு ஏனைய கோள்களில் இல்லை என்றும் கூறப்படுகின்றது.

அதாவது உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த காரணிகள் பூமியில் நிறைந்துள்ளன என்பது உயிரியல் விஞ்ஞானத்துறையில் பூரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கின்றது.

**இயற்கையும் மனிதனும்**

இயற்கையின் வடிவில் இறைவனைக் கண்டது அன்றைய மனித சமூகம். அறிவியல் வளர்ச்சி காரணமாக மனித நாகரிகம் வளர்ந்த நிலையில் மனிதனின் தேவைகள் அதிகரித்தன. இயற்கையுடன் மனிதன் போராட ஆரம்பித்தான். ஈற்றில் வெற்றி பெறுவது யார்? இயற்கையா? அல்லது மனிதனா? மனிதன் வென்றதாகப் பாசாங்கு செய்தாலும் இறுதி வெற்றி இயற்கைக்கே.

அதாவது

''சோதனையாலே தென்றலும் ஒருநாள் புயலாய்ச் சீறிடுமே'' என்பது போல இயற்கையின் சீற்றத்தை யாரால் தடுக்க முடியும்?

விளைவு

* மனிதன் உட்பட உயிரினங்கள் எதுவும் வாழ முடியாத அளவிற்கு பூமியின் வெப்பநிலை அதிகரிக்கின்றது.
* புற்றுநோய் போன்ற கொடிய நோய்கள் உருவாகின்றன.
* பச்சை வீட்டு விளைவு வாயுக்கள் காரணமாக பூமியின் வெப்பநிலை அதிகரித்து பனிக்கட்டிப் பாறைகள் உருகுவதால் கடல்மட்டம் உயர்ந்து தாழ்வான பிரதேசத்தில் உள்ள சில நாடுகள் உலகப் படத்தில் இருந்து மறைந்துகொண்டிருக்கும் ஆபத்தான நிலை ஏற்படுகின்றது.
* UV கதிர் போன்ற நச்சுக் கதிர்களில் இருந்து பூமியில் உள்ள உயிரினங்களைப் பாதுகாக்கும் ஓசோன் படலம் பாதிக்கப்படுவதால் தோல்புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

**இயற்கைச் சமநிலை**

''பூலோகத்துக் கற்பகதரு பனை மரம்''
''காட்டு வளம் பெருக
நாட்டு வளம் உயரும்''
''பனையை வளர்த்துப் பயனைப் பெறுவோம்''

யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளில் தற்போது படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களில் பெரும்பாலானோருக்கு புகையிரதத்தைத் தெரியாது என்பது ஆச்சரியம் அல்ல. ஆனால் எதிர்காலத்தில் குடாநாட்டு மாணவர்களுக்கு பனை மரமும் தெரியாமல் போகலாம் என்பது ஆச்சரியமே.

அதிரடியாக வந்த நிஷா நிழல் தந்த ஆலமரம், அரசமரம் என்பவற்றையும் குடாநாட்டில் இருந்து கொள்ளையடித்துச் சென்றுவிட்டது.

அன்றைய கரிக்கோச்சு இயந்திரங்களை ஞாபகப்படுத்தும் புகைபோக்கிகள், வாகனங்கள் என்ற பெயரில் எமது வீதிகளில் பவனி வருவதை குறைத்து எமது குடாநாட்டு வளிமண்டலத்தை பாதுகாப்போம். இதன்மூலம் புற்றுநோயாளர்கள் புதிதாக உருவாகும் வேகத்தையும் குறைப்போம்.

''விழாக்களின் ஆரம்பத்தில் நடைபெறும் மங்கல விளக்கேற்றலுடன் ஒரு மரக்கன்றையும் நாட்டுவோம்''

இது ஒரு புதுமையான மரம் நாட்டு விழா தொடர்பான நவீன கதை.

''அது ஒரு அரச அலுவலகம். அன்று ஆண்டு நிறைவு விழா. மதவழிபாடுகள், கலை நிகழ்வுகள் என்பவற்றுடன் ஆண்டுதோறும் மரம் நாட்டு விழாவும் கொண்டாடப்படுவது வழமை. பிரதம விருந்தினர் வருகை தந்துவிட்டார். மரக்கன்றும் கொண்டு வரப்பட்டுவிட்டது. வீடியோக்காரரும் ஆயத்தமாக நிற்கின்றனர்.

ஆனால் மரக்கன்றை எந்த இடத்தில் நாட்டுவது என்று விழாக் குழுவினர் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் நீண்டகாலம் அங்கு கடமையாற்றிக் கொண்டிருக்கும் சிற்றூழியர் ஒருவர் ஒரு வெறுமையான கிடங்கைக் காட்டிக் கூறினாராம்.

''ஆண்டுதோறும் இந்தக் கிடங்கில்தான் மரக்கன்றை நாட்டி வருகின்றோம்'' என்று.

''சிரிப்போம் சிந்திப்போம்''

''இயற்கை வளத்தைப் பேணி இயற்கைச் சமநிலையைக் காப்போம்.

## வார வசந்தம்

# கீரை வகைகளின் மருத்துவ மகத்துவங்கள்

வ.க.ஜெயபாலன்
யாழ்ப்பாணம்.

இயற்கை தந்த கொடைகளில் எமக்கு உணவாகப் பயன்படும் கீரைவகைகளின் மகத்துவம் அளப்பரியதாகும். விஞ்ஞான வளர்ச்சியால் பல்வேறு வகையான உணவு பழக்க வழக்கங்களால் பலவித நோயை நாமாக வரவழைக்கும் இக்காலத்தில் கீரைவகைகளின் மகத்துவங்களை அறிந்துகொள்வோம். அன்றாடம் எளிதில் கிடைக்கக்கூடிய கீரைவகைகளை எமது உணவில் சேர்த்து சத்துணவு பெற்று நோய்போக்கி சுகமான வாழ்க்கைக்கு வழிகோலிடுவோம். அவ்வகையில் சிலவகைக் கீரைகளின் மருத்துவ மகத்துவங்களைத் தருகின்றேன்.

* **கொத்தமல்லி:** பசியைத் தூண்டும். சிறுநீர் பெருகும். பித்தம், காய்ச்சல், வெப்பம், செரியாமை, வாந்தி, மயக்கம், நாவரட்சி குணமாகும். சிறுவர்களுக்கு வரும் சாதாரண நோய்களும் தீர உதவும். விந்துவைப் பெருக்கும்.
* **துளசி:** கசப்பு, துவர்ப்பு சுவையுடையது. வெப்பம் உண்டாக்கும். கோழையை அகற்றும். வியர்வை பெருகும். வாழை மட்டைச்சாறு நான்கு மடங்கும் துளசி இலைச்சாறு ஒரு மடங்கும் கலந்து கொடுக்க பாம்புக்கடி விசம் தீரும்.

காசம், சளி, இருமல், மலேரியா, நிமோனியா, வயிற்றுக்கோளாறுகள், பேதி, செரியாமை, சன்னி, சுரம், பித்தம், குடல் புழுக்கள், இரத்த அழுத்தம், இருதயம், குடல் நோய்கள் தீரும். மூச்சுக்குழல் நோய்கள், காது மந்தம், நமைச்சல், நரம்புத்தளர்ச்சி ஆகிய நோய்களைத் தீர்க்கும். காது விருத்தி உண்டாக்கும். இது ஒரு சிறந்த காய கல்ப மூலிகையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **புளியாரை:** இதனை புளிச்சக்கீரை என்றும் அழைப்பர். புளிப்பாக இருக்கும். கசப்பு, துவர்ப்பு சுவையும் இதில் உண்டு. பித்தம், வாதம், மூலம் வயிற்றுப்போக்கு, சுரம், சீதபேதி, பசியின்மை, வயிற்றுவலி, குடல்புண், குருதிக்கழிச்சல், மூலக்கடுப்பு ஆகியவை குணமாகும். பசியைத் தூண்டும். உடல் குளிர்ச்சி உண்டாகும்.
* **வல்லாரை:** எல்லா வகையான காய்ச்சல்கள், குடற்புழுக்கள், ஈரல் நோய்கள், மேகநோய், குட்டம், தோல் நோய்கள், காக்காய் வலிப்பு, குடல்நோய், வாய்ப்புண், சீதபேதி, யானைக்கால், மூளைநோய் போன்றவற்றை குணமாக்கும். உடல் உறுதியாகும். நினைவு ஆற்றல் பெருகும்.
* **அகத்திக் கீரை:** குளிர்ச்சி உண்டாகும். மலச்சிக்கல் நீங்கும். வயிற்றில் உள்ள பூச்சியை அகற்றும். பித்தத்தைக் குறைக்கும் மருந்தை முறிக்கும். பூ இலைகளை அரைத்து தலைவலிக்கு பற்றுப் போடலாம். இக்கீரையை அடிக்கடி உண்ணக்கூடாது. மாதத்தில் 3 அல்லது 4 தடவைகள் பயன்படுத்தலாம்.

(வளரும்)

# யாழ். பாஷையூர் பு
# ஆலயப் பெருவி

## பதுவைப் பதியர் புனித அந்தோனியார் வாழ்க்கைச் சுருக்கம்

திருச்சபையின் புனிதர்களில் அதிகம் பிரபலமடைந்தவரும், நன்கு கௌரவிக்கப்பட்டவரும், உலகெங்கணும் போற்றிப் பாராட்டப் பெறுபவரும், வரங்கேட்டு வருபவர்களுக்கு வரங்கள் பல அளிப்பவருமான பதுவைப் புனிதர் அந்தோனியாரைப் போன்ற அருளாளர் வெகு சிலரே எனின் அது மிகையாகாது. " புனித அந்தோனியார் பதுவையின் பாதுகாவலர் மாத்திரமன்றி உண்மையாகவே அகில உலகத்தின் புனிதராகவும் இருக்கின்றார்" என்ற 13 ஆம் சிங்கராயர் பாப்பரசரின் கூற்றில்தான் எவ்வளவு உண்மை.

போத்துக்கல்லில் உள்ள லிஸ்பன் நகரில் 1195ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் நாள் பிறந்தார். புனிதரின் தந்தையார் பெயர் மாட்டின் புய்யோன் தாய் தெரசா த திவேரா என்ற அழகிய தேவாம்சம் பொருந்திய அம்மணி. பிரபுக்கள் வம்சத்தில் பிறந்த புனிதர் திருமுழுக்கின்போது பெற்ற திருப்பெயர் பெர்டினன்ட். சிறு வயதிலேயே தேவ சினேகத்தினால் உந்தப்பட்ட நம்புனிதர் சிறு துறவிகள் (Friars Minor) சபையில் சேர்ந்து தேவ தொண் டாற்ற முடிவு செய்தமையில் வியப்பேதும் இல்லை. அவ்வமயம் தன் பெயரை அந்தோனி என மாற்றிக் கொண்டார்.

தமது பதினைந்தாம் வயதில் அகுஸ்தீன் துறவற சபையில் சேர்ந்து சகல கல்வி, கேள்விகளிலும் வேதாகம அறிவிலும் [illegible]ற்பன்னராக விள[illegible]கினார்.

இக்காலத்தில் மொராக்கோ தேசத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் கிளம்பிய கலவரத்தில் பிரான்சிஸ்கு சபைத் துறவிகள் பலர் வேத சாட்சிகளாக உயிர்த் தியாகம் பண்ண நேரிட்டது. இந்த நிகழ்ச்சி நம் புனிதர் உள்ளத்தில், தானும் இறைவனுக்காக மரிக்க வேண்டும் என்ற ஆசையாக உருவெடுத்தது. தானும் மொராக்கோ செல்லத் தீர்மானித்தார். இறைவன் சித்தமோ வேறு விதமாக இருந்தது.உடல் நோயுற்ற நிலையில் இவர் ஸ்பானியா திரும்ப நேர்ந்தது. அவ்வேளை வீசிய கடும் புயல்காற்று நம் இளம் புனிதரை தென் இத்தாலியில் சிசிலி தீவுக்கு கொண்டுபோய்ச் சேர்த்தது. உடல் சற்றுத் தெளிந்ததும் அவர் அண்மையில் உள்ள அசிசி நகரில் நடந்து கொண்டிருந்த பிரான்சிஸ்க்கு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் கிட்டியது.

கடின தவத்தாலும், செபத்தாலும், கடின உபவாசத்தாலும் நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக ஆண்டவரின் அன்புக்குப் பாத்திரமானார். நம்புனிதர் எவ்வளவுதான் அறிவுத்திறனை அவர் மறைத்திருந்தாலும், அவரது மேன்மையை வெளிப்படுத்த ஆண்டவர் சித்தம் கொண்டதன் காரணமாக அழகிய பிரசங்கம் ஒன்றை அவர் நிகழ்த்த நேர்ந்தது. அவரது அறிவும் ஆழ்ந்த இறைபக்தியும் இவ்வாறு வெளியானதும் புனித பிரான்சிஸ்க்கு அவர்களே நம் புனிதரை முக்கிய போதகராக தம் சபையில் நியமித்தார். பிரான்சு தேசத்தில் ஆர்ன்ஸ் மொத்த மொலிபா பூர்ஜெசிலும், இத்தாலியில் வேர்செல்லி இறமினி, பதுவை ஆகிய பட்டணங்களிலும், புனித அந்தோனியார் ஆற்றிய பணி சிறப்பு வாய்ந்தது. செல்லுமிடமெல்லாம் மக்கள் அவர் பேச்சைக் கேட்கத் திரண்டனர். பாவிகள் திருந்தினர். தென் பிரான்சில் இக்காலத்தில் அல்பிஜென்சர் என்பவர் கிறிஸ்தவ திருமறையின் போதனைகளைத் தவறான வழியில் விளங்கியும் விமர்சித்தும் வந்தார். அத்தவறான போதகத்தில் மயங்கிய எத்தனையோ பேர்களை இறைவனின் மந்தைக்கு மீட்டுத்தந்த பெருமை நம் புனிதருக்குண்டு. இதனாலேயே அவரை பதிதரின் சுத்தியல் எனவும் அழைத்தனர்.

### அற்புத வரத்தார்

தம்முடைய அடியானுடைய சேவையையும், போதகத்தையும், பற்பல அரிய பெரிய அற்புதங்களைச் செய்வித்து முத்திரையிட்டார் ஆண்டவர். பன்மொழி பேசும் வரமும், ஒரே வேளையில் இரு இடங்களில் காணப்படும் வரமும் பெற்றவரான புனித அந்தோனியார், நோய்களைக் குணமாக்கினார். பேய்களை விரட்டினார். மாண்டவர் மீண்டார், தொலைந்தவை கிடைத்தன. இப்படி பல்வேறு அற்புதங்கள் நிகழ்த்தியிருப்பினும் நற்கருணையில் ஆண்டவர் உண்மையாகவே பிரசன்னமாகி இருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டிய போது, கழுதைகள் கூட வந்து மண்டியிட்டமையும் மனிதருக்கு புனிதர் தேவவார்த்தையைப் போதித்த போது மீன்களும் கூட தண்ணீருக்கு வெளியே வந்து போதனையைக் கேட்டமையும் சுவையான நிகழ்ச்சிகள்.

ஒரு சமயம் இவரை முற்றாக வெறுத்த சில தீயவர்கள் நஞ்சு உணவை இவர் உண்ணச் செய்தனர். எனினும் சிலுவை அடையாளம் இட்டு உண்டதினால் இவருக்கு தீங்கேதும் ஏற்படவில்லை. பொய்க்குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனையை ஏற்க விருந்த தம் தந்தையைக் காப்பாற்ற இறந்தவனையே மீண்டும் உயிர் பெற்று நீதிமன்றில் தோன்றச் செய்தார். இப்படிச் செய்த புதுமைகள் எண்ணில் அடங் காத படியினாலேயே இவரை "கோடி அற்புதவரத்தர்" என பக்தர்கள் போற்றுவர்.

அற்புதம் செய்ததினால் அவர் புனிதராகவில்லை. தன் தாழ்மை, நேர்மை அன்பு முதலியவற்றால் இறைவனின் நேச தோழர் ஆனமையினாலேயே புனிதரானார். இத்தகைய சிறப்பும், மேன்மையும் கொண்ட புனிதரை ஆண்டவர் தமதண்டை விரைவிலேயே அழைத்துக்கொண்டார்.



## பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய நிகழ்வுகள்

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் 1850ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டது. இவ்வாலயம் முதலில் சிறு ஆலயமாக இருந்து பின் கட்டிடக் கலை அறிமுகமாகியதும் கட்டடமாகி புதுப்பொலிவு பெற்று தற்போதுள்ள நிலையினை அடைந்தது. நிகழும் 2009 ஆம் ஆண்டில் தனது 159ஆம் வருடாந்த நிறைவினை கொண்டாடுகிறது.

இவ்வாலயம் ஆனி முதலாம் திகதி கொடியேற்றத்துடன் திருநாள் கொண்டாட்டம் ஆரம்பமாகும்.கொடியேற்றம் முடிவு பெற்றதும் 01.06.1998 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட குழந்தை இயேசு சுரூபத்தடியில் ஆராதனையும் இடம்பெறும். இத்துடன் முதல் நாள் நிகழ்வுகள் அனைத்தும் நிறைவு பெறும்.

2ஆம் நாள் வழமை போல ஆலயத்தில் காலைத் திருப்பலி இடம் பெறும்.

3ஆம் நாள் வழமைபோல் காலைத் திருப்பலியும் பின் 02.02.1990 ஆம் ஆண்டு பாஷையூர்க் கடலில் அ[illegible]வரம் இடப்பட்டு 03.06.1990ஆம் ஆண்டு திறக்கப்பட்ட சுரூபத்தில் ஆராதனை நடத்தி கடற்றொழிலாளர்களின் குறைகளைத் தீர்க்க பாதுகாவலரான புனித அந்தோனியாரை காவலாக்கிய ஞாபகார்த்த நிகழ்வுகள் நடைபெறும்.

4ஆம் நாள் நவ நாள் வழிபாடுகள் ஆரம்பமாகும். 12ஆம் திகதி அன்று நற்கருணை ஆராதனையும், 13ஆம் திகதி திருநாள் திருப்பலி ஆயர் தலைமையிலும், அன்று மாலை புனிதரின் தேர்ப்பவனியும் இடம்பெறும்.

## விழா சிறப்புற வாழ்த்துவோர்


Co-op City

கூட்டுறவு நகர்

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்
கூட்டுறவு நகர் I, கூட்டுறவு நகர் II
ஆகியவற்றின் விற்பனைப் பகுதிகளுடன்
புடைவை வியாபாரத்திற்கான ஒரு தனிப்பகுதியையும்
ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.
எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
இங்கிலாந்து, ஜப்பான், இத்தாலி போன்ற நாடுகளில்
இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட
Trouser Matrials,
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட
khushboo சல்வார் வகைகள் மிகக் குறைந்த
விலைகளில்......
இப்பொழுதே விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.
குறிப்பு:
மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புவோர்
யாழ். மாவட்ட நகர்ச்சிக்
கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசத்துடன்
தொடர்பு கொள்ளவும்.
யாழ்ப்பாணம் பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம் (வ.து).

HOTEL ROLEX
சகல புரியாணிகள் (சைவ, அசைவம்)
குளிர்பானங்கள், சிற்றுண்டிகள் (றோல்ஸ்,
வடை, கட்லட், சமோஷா) என்பன
போன்றவற்றுக்கும் நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்
ஹொட்டல் றொலெக்ஸ்
ஓடர்கள் குறித்த நேரத்தில் கவனிக்கப்படும்.
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2808
360, Galle Road, Colombo - 6, 2360462.

குமார் பேக் ஹவுஸ்
பாண், பணிஸ் வகைகள், கேக்
வகைகள், பிஸ்கற் வகைகள், பிறந்த
நாள் நிகழ்வு விழாக்களுக்கான கேக்
வகைகள் ஓடருக்கு
செய்து தரப்படும்.
சென். செபஸ்தியான் வீதி,
பாசையூர்.

சாந்தன் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
பாண்டியன்தாழ்வு,
கொழும்புத்துறை.

வெள்ளைப் பிள்ளையார் ஸ்ரோஸ்
ஈச்சமோட்டைச் சந்தி,
ஈச்சமோட்டை.

ஆகாஸ் பான்சி குட்ஸ்
தையல் தொழிலகம்
ஆண், பெண்களுக்கான
ஆடைகள் குறித்த
நேர காலத்தில் ஓடருக்குத்
தைத்துக் கொடுக்கப்படும்.
பீச் றோட், ஈச்சமோட்டை.

அனைவரது அபிமானத்தைப் பெற்ற
OMEX HOTEL
சுத்தம், சுவை, தரம், நியாய விலை
OMEX HOTEL
இல.372, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 [illegible]

ஜீவா பேக்கரி
பாண், பணிஸ் வகைகள்,
கேக் வகைகள்,
பிஸ்கற் வகைகள் ஓடருக்கு குறித்த
நேரத்தில் செய்து தரப்படும்.
173, 189, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

செல்வம் வீடியோ
சிறந்த படப்பிடிப்பாளரும்,
அல்பங்கள்
வடிவமைப்பாளரும்
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னித அந்தோனியார்
# ழா – 13.06.2009

## கோடி அற்புதராம் எம் பாதுகாவலர் - புனித அந்தோனியாரின் திருநாள் நல்வாழ்த்துக்கள்



எம் பாதுகாவலர் கேட்கும் வரம் கொடுக்கும் புனித அந்தோனியாருக்கு விழா கொண்டாடுவது எம் எல்லோருக்கும் பெருமையும், பெருமகிழ்வும் நிறைந்த நிகழ்வாகும்.

புனித அந்தோனியார் ஒரு சாதாரண மனிதக் குழந்தையாக போர்த்துக்கல் நாட்டில் 1195ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி அரச கோத்திரத்தில் இறைபயமுள்ள குடும்பத்தில் பிறந்தார். பெற்றோர் குழந்தையை ஞானத்திலும் ஒழுக்கத்திலும் நிறைந்த தூயதோர் குழந்தையாக வளர்த்தார்கள். இறைவனின் உறுதியான வழிகாட்டுதல் அவரோடு இருந்தது. குழந்தை வளர்ந்து பெரியவராகி இறைவனில் மிக மிக அன்புள்ளவராக உறுதியோடு வளர்ந்து தன்னை முழுமையாக இறைவனிடம் அர்ப்பணித்து ஒரு புனித மனிதனாக மாறினார்.

குழந்தை யேசுவின் நேரடி காட்சியைப் பெற்று ஆண்டவரின் சிறப்பு அருளைப் பெற்று வாழும்போதும் இறந்த பின்பும் புதுமைகள் பல செய்து கோடி அற்புதராக போற்றப்படுகின்றார். இன்று நாம் வாழும் காலம் குறிப்பாக இந்த ஆண்டு தமிழ் இனத்திற்கு சோகமும், அவலமும் நிறைந்த ஆண்டாக மாறிவிட்டது. அவலத்தின், விரக்தியின் உச்ச நிலையில் எம் இனத்தின் ஒரு பகுதி உள்ளது.

ஒரு சிறிய காலப்பகுதிக்குள் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு, அங்கவீனர்களாக மாறியுள்ளனர். பல லட்சக் கணக்கான மக்கள் தங்கள் சொந்த இல்லிடங்களை விட்டு அகதிகளாக அடைக்கப்பட்டுள்ளார்கள். பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர், உறவுகளைப் பிரிந்து அடிப்படை வசதிகளின்றி உயிர்வாழ்வதற்கு வழி தெரியாது எம்மக்கள் நம்பிக்கையிழந்து நிற்கும் இந்த ஆண்டிலே புனிதரின் விழா கொண்டாடப்படுகிறது.

நம்பிக்கையிழந்த நிலையிலே புதுப்படைப் பாகமாறுவதே கிறிஸ்தவ வாழ்வு. யேசு சித்திரவதை செய்யப்பட்டு இறந்தபோது நம்பிக்கை இழந்த அவருடைய சீடர்கள் அழிந்து போகவில்லை. யேசுவின் உயிர்ப்போடு நம்பிக்கை பெற்று புதிய மனிதர்களாக புதுவாழ்வு பெற்று எழுந்தார்கள். நம்பிக்கையிழந்த எம்மினம் நம்பிக்கை கொண்டு எழ அந்தோனியாரின் புதுமை எமக்குத் தேவை. அவர் எமக்காக இறைவனிடம் பரிந்துரைக்க வேண்டும் என்று நம்பிக்கையோடு செபிக்க உங்களை அழைக்கின்றேன்.



"அஞ்சாதீர் பயப்படாதீர் நான் உங்களோடு" என்ற யேசுவின் வார்த்தையிலே நம்பிக்கை கொண்டு அவருக்காக வாழ்ந்த புனிதரைப்போல யேசுவிலே நம்பிக்கையோடு வாழ இப்பெருவிழாவிலே உங்களை அழைக்கின்றேன். ஏழை, எளியவர்கள் மட்டிலே பற்றும் பாசமும் உள்ளவராக அவர்களுக்குப் பணிவிடை புரிந்த அந்தோனியாரின் அருளால் கைவிடப்பட்ட எம் மக்களுக்கு ஆறுதலாக எம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து வாழ உங்களை அழைக்கின்றேன்.

ஏழைகளை அன்பு செய்து அவர்களின் சிறிய சிறிய தேவைகளுக்காக புதுமைகள் செய்து ஆறுதல்படுத்திய இப்புனிதர் ஏழைகளின் நிலைக்குக் காரணமான செல்வந்தர்கள் மட்டில் கடும் சினம்கொண்டிருந்தார். அநீதிகளைக் கண்டு சுரண்டலைக் கண்டு அதிகார வர்க்கத்தை மனமாற்றத்திற்கு அழைத்திருந்தார். அநீதி செய்வோர் மனிதத்தை மதியாதோர், மனம்மாற, செபிக்க எல்லோரையும் அழைக்கின்றேன்.

புனித அந்தோனியாரின் விழா எமக்கு நம்பிக்கை ஊட்டி ஆறுதல் தருவதாக, சமுதாயத்திலே நீதி மலர்ந்து எம் இனம் நிம்மதியாக, அமைதியாக, உரிமையோடு சுதந்திரமாக வாழும் காலம் மலர, புனிதரின் விழாவில் அவர் அருள்வேண்டி வாழத்துகின்றோம். நாம் எல்லோரும் மகிழ்வோடு, நம்பிக்கையோடு வாழ்வோம் என்று விரும்பி வாழ்த்துகின்றேன்.

எம் இனத்தின் துன்பம் விரைவாக அகல இறை நம்பிக்கையுடன் அனைவரும் வாழ வேண்டும் என்று விரும்பி வாழ்த்துகின்றேன். பாசையூரிலே கோயில் கொண்டு கோடி அற்புதம் புரியும் இப்புனிதரின் ஆலயத்தின் சிறப்புக்காக மதபேதமின்றி ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கும் அனைவருக்கும் குறிப்பாக எமது வருடாந்த விழா சிறப்புற அமைய உதவிய அனைவருக்கும் நன்றிகள்.

புனிதரின் இவ்வாலயமும் அது அமைந்துள்ள இடமும் புனிதமாகப் பேணப்பட அனைவரது அன்பான ஒத்துழைப்பையும் அன்போடு எதிர்பார்க்கின்றோம். அனைத்து மத மக்களையும் அரவணைக்கும் இவ்விடம் எல்லோருக்கும் அமைதி தர, யேசுவின் அன்பிலே இணைந்துகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். கோடி அற்புதராம் புனிதரின் பரிந்துரை உங்கள் எல்லோர் வாழ்வையும் சிறப்பிக்க வேண்டி மீண்டும் உங்கள் எல்லோருக்கும் எமது செபம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

இறையாசீர் உங்களுடன் இருப்பதாக.

அருட்பணி. அருளானந்தர் பானிஸ்
புனித அந்தோனியார் ஆலயம், பாஷையூர்.

இவ்வருட ஆலயப் பெருவிழா 04.06.2009 ஆரம்பமாகியது. இறுதி நாளான இன்று (13.06.2009) சனிக்கிழமை புனித அந்தோனியாரின் திருச்சொரூபப் பவனியை மக்கள் அனைவரும் கண்டு களித்து இறை ஆசீர்பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

மலர் அமைப்பு: நந்தன், கதிர்

ஸ்ரீமுருகன் ஸ்ரோஸ்
பல்பொருள் வாணிபம்
சகலவிதமான பொருள்கள் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் நியாய விலைக்கு
பெற்றுக்கொள்ளலாம்.
ஈச்சமோட்டை வீதி, ஈச்சமோட்டை.
சிறீஸ் கோப்பி
133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
கட்டடப் பொருள்கள்,
பெயிண்ட் வகைகள்
யாவும் நியாய விலைக்கு
பெற்றுக்கொள்ளலாம்.
இல.147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நெல்சன் வீடியோ டிஜிற்றல்
அன் போட்டோ
அல்பங்கள் வடிவமைப்பாளர்
அனைத்து வேலைகளும் குறித்த
நேர காலத்திற்கு செய்து
தரப்படும்.
இல.44/1, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.:0776788207

சரவணபவான்
அரைக்கும் ஆலை
31, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

வஸ்தியான் பேக்ஹவுஸ்
பாண், பிஸ்கற், கேக் வகைகள்
நியாய விலைக்கு நிறைவான
நிறையுடன் விற்பனை
செய்யப்படும்.
வஸ்தியான் சந்தி, சுண்டிக்குளி.

சுத்தமாகவும் சுவையாகவும்
தயாரிக்கப்பட்ட சைவ, அசைவ
உணவு வகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
விக்கினா ஹோட்டல்
462, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

பிருந்தா ஜுவெல்லர்ஸ்
22 கரட் தங்கநகைகள் விரும்பிய
டிசைன்களில் ஓடருக்குச் செய்து
தரப்படும்.
301, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

லிங்கம் கூல்பார்
சுவையான ஐஸ்கிறீம்,
ஐஸ்பழ வகைகள், பழரசங்கள்
சுவையான உணவு வகைகள் ஓடருக்கு
குறித்த நேரகாலத்தில் செய்து தரப்படும்.
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தேவி ஸ்ரோஸ்
பல்பொருள் வாணிபம்
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

குமரன் ஸ்ரோஸ்
பல்பொருள் வாணிபம்
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

தேவராசா ரெம்சி
பல்பொருள்
வாணிபம்
2ஆம் குறுக்குத் தெரு, பாசையூர்,
யாழ்ப்பாணம்.

ஐஸ்கட்டி உற்பத்தி
தொழிற்சாலை
இல.34 (18), ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6496

செல்வம் நகைத் தொழிலகம்
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்குச் குறித்த
காலத்துக்குச் செய்து தரப்படும்.
12, சென். அன்ரனிஸ்,
பாஷையூர் வீதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



நல்லூர் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் ஆகக் கூடுதலான இடங்களைப் பெற்றுக் கொண்ட நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய மாணவி செல்வி ஹம்சாயினி சிறிஸ்கந்தராஜா ஆரம்பப் பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்குரிய வெற்றிக் கிண்ணத்தை பாடசாலை அதிபர் கே.வடிவேல் வழங்குவதையும் விளையாட்டுச் செயலாளர் அருகில் நிற்பதையும் ஆசிரியர்கள், மாணவர்கள் பாராட்டுவதையும் படத்தில் காணலாம்.



வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலரின் ஏற்பாட்டில் மூளாய் வேரம் ஐக்கிய இளைஞர் சனசமூக நிலையத்தில் பெற்றோர்கள், பிள்ளைகளுக்கான கல்வி விழிப்புணர்வு செயலமர்வு அண்மையில் நடத்தப்பட்டது.

செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா உரையாற்றுவதையும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சமூகசேவை அலுவலர் உ.செல்வம், வட்டு.கார்த்திகேய வித்தியாலய அதிபர் ந.சிவசுப்பிரமணியம், சங்கானை பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி சி.பானுமதி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



சாவகச்சேரி நகர சபையின் நுணாவில் பொது நூலகக் கிளையில் நடைபெற்ற தேசிய நூலகவார நிறைவுநாள் நிகழ்வில் நூலகர் எஸ்.சுந்தரலிங்கம் நூலகப் பயன்பாடுகள் பற்றி கலந்து கொண்ட பொது மக்களுக்கு விளக்குவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட முன்னாள் திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன், நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் மற்றும் கணேச வித்தியாசாலை அதிபர் திருமதி சா.நகுலேஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (59)




வடமராட்சி லயன்ஸ் கழகம் வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் உள்ள சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள், உடு புடைவைகள் என்பனவற்றை அண்மையில் வழங்கியது.

நிகழ்வில் லயன் எஸ்.பத்மநாதன் சிறுமி ஒருவருக்கு அவற்றை வழங்குவதையும், மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் மு.சிவநேசன், லயன் பி.கதிரமலை, லயன் அ.செந்தில்லிங்கம் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: கர்ணன்)*



சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டின்கீழ் உள்ள மாணவர்களுக்கு கிறிஸ்தவ சிறுவர் நிதியத்தால் உதவிப் பொருள் வழங்கப்பட்டது.

உதவிப் பொருள்களை முன்னாள் பிரதேச செயலரும் தற்போதைய மேலதிக அரச அதிபருமான திருமதி ரூபினி வரதலிங்கம் பயனாளி ஒருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம். (112)




பாடசாலை ஊடாகச் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமா? இல்லையா? என்னும் தலைப்பில் வடமராட்சி வலயப் பாடசாலைகளிடையே வை.எம்.சி.ஏ.நிறுவனம் நடத்திய விவாதப் போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி முதலிடம் பெற்றது.

விவாதத்தில் கலந்துகொண்ட மாணவிகளான தெ.குலாஸ்கிளா, அ.நர்மதா, ஜெ.துர்க்கா, செ.கோபிகா, சி.துளசி ஆகியோருடன் பாடசாலை அதிபர் திருமதி இ.குட்டித்தம்பி, ஆசிரியர் திருமதி ம.அசோகலிங்கம் ஆகியோரையும் படத்தில் காணலாம். (253)



யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் கடந்த மே மாதம் நடைபெற்ற ரொக்க விற்பனையில் அதிக விற்பனையை மேற்கொண்ட பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு பணப்பரிசுகள் வழங்கப்பட்டன.

இதில் சங்கத் தலைவர் ப.கிரிதரன் பணியாளர் ஒருவருக்கு பரிசு வழங்குவதையும் அருகில் சங்க இயக்குநர்சபை உறுப்பினர் ச.டோமினிக், பொது முகாமையாளர் து.மனோகரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (224)



வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவுவதற்காகக் கொக்குவில் மேற்கு மணியர்பதி சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய இந்து இளைஞர் மன்றத்தினர் கிராம மக்களிடம இருந்து திரட்டிய 65 ஆயிரம் ரூபா நிதியை இந்து அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடி வரும் பக்தர்களின் குறை தீர்க்கும் கோடி அற்புதரான புனித அந்தோனியார்

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் இன்று புனித அந்தோனியாரின் பெருவிழாவைக் கொண்டாடுகிறார்கள். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது

கத்தோலிக்க திருச்சபையானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 13ஆம் திகதி ''கோடி அற்புதர்'' என்று அழைக்கப்படும் தூய அந்தோனியாரின் பெருவிழாவை பெருமகிழ்வோடு கொண்டாடுகின்றது. யாழ் நகரின் கடற்கரை ஓர மாக அமைந்துள்ள பாஷையூர் பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி இன மத வேறுபாடின்றி பக்தர்களுக்கு அற் புதங்களும் அருங்குறிகளும் செய்து வரும் புனித அந்தோனியாரின் பெருவிழா இன்று பெருமகிழ்வோடு கொண்டாடப் படுகிறது.



இறைவனுடைய பணிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த அந்தோனியார் 1219ஆம் வருடம் தன்னுடைய 24 ஆவது வயதில் இறைவனின் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார். இறைமகன் இயேசுவின் திருவுடலை தன்னுடைய கரத்திலேதாங்குவதை பெரும் பேறாக கருதினார். தான் தங்கியிருந்த குருமடத்தின் வாயிற் காப்பாளனாக பணியாற்றிக் கொண்டிருக்கும்போது புனித பிரான்சிஸ்கன் சபைத் துறவிகளை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட அச்சபையில் தன்னை இணைத்துக் கொள்ள விரும்பி அச்சபையின் மேலாளரின் அனுமதியோடுதன்னைஇணைத்து கொண்டு சபையின் ஒழுங்கின் பிரகாரம் தன்னுடைய பேர்டினன்ட் என்ற பெயரை ''அந்தோனி'' என மாற்றிக் கொண்டார்.

**முதன்மையான மறையுரைஞர்**

அசிசீ நகரில் குருத்துவ திருநிலைப்படுத்தல் சடங்கொன்றில் எதிர்பாராத விதமாக மறையுரை ஆற்றும் வாய்ப்பு ஒன்று கிடைத்த போது தயக்கத்தோடு அவர் அதை ஏற்றுக் கொண்டாலும் ஆவியாரின் அருட்பொழிவும் அவரிடம் காணப்பட்ட திறமை, ஆழமான மறைநூல் அறிவு, நாவன்மை, மக்களின் நெஞ்சங்களை மேலே எழுப்பும் ஆற்றல் போன்றவையும் கைகொடுக்க சபைத்தலைவர் வியக்கும் படி மறையுரையாற்றினார். தொடர்ந்து மறையுரை ஆற்றும் பணியும் துறவிகளுக்கு மறையுரை போதிக்கும் பணியும் ஒப்படைக் கப்பட்டது.

**கோடி அற்புதர் புனித அந்தோனியார்**

இறைவார்த்தையை இறைஞானத்தின் துணைக்கொண்டு அறிவித்த புனித அந்தோனியாரின் '' நாக்கு'' இன்றும் அழியாமல் இருப்பதும் திருச்சபையில் ஒரு புனித பண்டமாக பேணப்படுவதும் ஒரு மாபெரும் புதுமையாகும். கோடி அற்புதரான புனித அந்தோனியார் தன்னுடைய வாழ்நாள்களில் அளவிடமுடியாத அற்புதங்களும் அருங்குறிகளும் செய்ததாகச் சான்றுகள் கூறுகின்றன.

**அந்தோனியாரின் மரணம்**

புனித அசிசீயாரின் இறப்புக்குப் பின் இத்தாலிக்கு வரவழைக்கப்பட்ட புனித அந்தோனியார் தொடர்ந்து இறைவாக்குரைக்கும் பணியில் ஈடுபட்டார். 1231 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உணவறையில் உணவருந்திக்கொண்டிருந்த புனித அந்தோனியார் அசாதாரண நிலையில் காணப்பட்டார். திடீரென மயக்கமுற்று சுய நினைவு இழந்தார். ஓரளவு உடல் நலம் தேறிய நிலையில் கண்களை ஏறெடுத்துப் பார்த்து ''ஆண்டவரை காணுகின்றேன்'' என்று கூறிய புனித அந்தோனியார் ஒப்புரவு அருட்சாதனம், நோயிற் பூசுதல் அருட் சாதனம் பெற்றவராக ஜூன் பதின்மூன்றிலேயே தனது 36 ஆவது அகவையில் இறைபதம் அடைந்தார். ஜூன் 17 இல் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டு மரித்த ஒருவருடத் திற்குள்ளேயே 1232 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி பாப்பிறை 9ஆம் கிறகோரியாரால் புனிதர் பட்டம் வழங்கப்பட்டுதிருப்பீடங்களில் வணங்க தகுதி பெற்றார். 1946ஆம் ஆண்டு திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் அவர்கள் ''மறைவல்லுனர்'' பட்டம் அளித்து இவரை பெருமைப்படுத்தினார்.

**முடிவாக**

அன்று தேரேறி வந்து விசுவாசத்தோடு தன்னை நாடி வரும் பக்தர்களின் வேண்டுதல்களை கேட்டு குறைகளை நீக்கி அருள் வழங்கும் புனித அந்தோனியாரின் வாழ்வை நாம் பின்பற்றி வாழ முற்படுவோம். எமது நாடு அமைதி பெறவும் மக்கள் நிம்மதியாக வாழவும் வரம் வேண்டுவோம்.

**இ. அ. அமலரட்ணம், பேராலயம்.**

## தேவ நேசத்தினால் உந்தப்பட்டு துறவியான புனித அந்தோனியார்

புதுமை மிக்க புனித அந்தோனியார், போத்துக்கல் தேசத்தின் லிஸ்பன் நகரில் பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தார். இவரின் தாயார் அழகிய தேவாம்சம் பொருந்திய திரேசா, தந்தையார் மாட்டீன் ஆவார்.

இவர் சிறுவயது முதல் கிறிஸ்து நாதரிலுள்ள பற்றுதலால் கடவுளைப் பற்றி மக்களுக்குப் போதிக்க வேண்டுமென்று தேவ நேசத் தினால் உந்தப்பட்டு துறவற சபையில் துறவியாக இணைந்தார்.

அந்தோனியார் தேவ நூல்களை வாசிப்பதிலும் அழகான அர்த்தமுள்ள மறையுரைகளையும் ஆற்றுவதில் விற்பன்னராக விளங்கினார். இவரின் மறையுரைகளைக் கேட்ட மக்கள் பாவ வாழ்க்கையை விட்டு, கிறிஸ்தவ திருமறையை ஏற்று இறைவனின் அண்டை வந்தார்கள். இதனால் இவர் பதிதரின் சுத்தியல் எனவும் அழைக்கப்பட்டார்.

அறிவும் ஆழ்ந்த இறைபக்தியும் கொண்ட புனிதர் கடின தவத் தினாலும் கடின செபத்தாலும் உயர் ஞானத்தைப் பெற்று இறை வனின் அன்புக்குப் பாத்திரமானதால், இவர் கரங்களிலுள்ள வேத புத்தகத்தின் மீது குழந்தை வடிவில் யேசு அமர்ந்தார்.

அற்புதங்கள் புரிவதில் வல்லவரான புனிதர், தேவ நற்கருணை யில் ஆண்டவரின் பிரசன்னத்தை கழுதை மண்டியிட்டு காட்டியதன் மூலம் உணர்த்தினார். உடல், உள நோய்களை குணமாக்கினார். காணாமற் போனவற்றைக் கண்டடையச் செய்வதில் வல்லவர் ஆக விளங்கினார். கோடி புதுமைகள் புரிந்து கோடி அற்புதர் ஆனார்.

இறை வாழ்வில் நிலைத்து வாழ்ந்த இப் புனிதர் தனது 36 ஆவது வயதில் 1231 ஆண்டு ஆனி மாதம் 13 ஆம் திகதி விண்ணுலகு சென்றார். அவரின் உடல் அடக்கம் செய்யப்பட்ட நாள் செவ்வாய் கிழமையாகும். அந்நாளே அவருக்கு உரித்தானதாகும்.

நா அழியா வரம் பெற்ற புனித அந்தோனியாரின் ஆலயங்கள் அநேகமாக கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் கரையோரப் பகுதிகளில் காணலாம்.

புனிதருக்கு விழா நிகழும் இந்நாளில் நாட்டின் கொடிய யுத்தத்தினால் போர் அனர்தங்களுக்கு உள்ளாகி உறவினர்களைத் தொலைத்தவர்கள். உடல், உள தாக்கங்களுக்கு ஆளானவர்கள் அதிலிருந்து மீண்டு வரவும், அசாதாரண நிலமைகள் தோன்றாதிருக்கவும், சமாதானம் நிலைக்கவும், மக்கள் இறைவனில் நம்பிக்கை கொண்டவர்களாக வாழ, தொழில்துறைகள் சீரடைய, வழமான வாழ்வு ஏற்படவேண்டுமென்று எமது விண்ணப்பங்கள், வேண்டுதல்களை புனித அந்தோனியாரிடம் சமர்ப்பித்து மன்றாடுவோம்.

**டாக்டர் அ. பிறிற்ரோ டக்ளஸ், பாஷையூர்.**



# கலைநயம் மிக்க சமுதாயத்தை உருவாக்குவதே 'கேக் ஐசிங்' கண்காட்சியின் நோக்கமாகும்

நல்லூர் அம்மன் வீதியில் அமைந்துள்ள 'யோகி ஹோம் சயன்ஸ்' அக்கடமியின் 'கேக் ஐசிங்' கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இக் கண்காட்சி திங்கட்கிழமைவரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை கண்காட்சியைப் பார்வையிடமுடியும்.
கண்காட்சி நடத்தப்படுவது தொடர்பாக 'யோகி ஹோம் சயன்ஸ்'' அக்கடமி நிர்வாகி திருமதி யோகினி சண்முகநாதன் கூறிய கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன.

பெண்களுக்குச் சுயதொழில் வாய்ப்பாகவும், கலைசார்துறையாகவும் விளங்கிக்கொள்வதில் அழகுக்கலை, 'கேக் ஐசிங்' என்பன முக்கிய இடம் வகிக்கின்றன.

அத்தகைய துறையானது அவர்களின் பொருளாதாரத்தைச் சீர்தூக்குவதோடு, ஒருவிதமான கலை நுட்பத்தையும் உண்டு பண்ணுகிறது.

அந்த வகையில் 'யோகி ஹோம் சயன்ஸ்' அக்கடமி கடந்த 20 வருடங்களாக இத்தகைய துறையில் நின்று நிலைத்து ஆயிரக்கணக்கான துறைசார் கலைஞர்களை உருவாக்கியுள்ளது. நாட்டின் சகல பாகங்களிலும் இத்தகைய துறைசார்ந்தோர் உள்ளனர் என்று பெருமையடைகிறார் இந்த நிலைய நிர்வாகி திருமதி யோகினி சண்முகநாதன்.

நல்லூர், அம்மன் வீதியில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தில் மிகப் பிரமாண்டமான 'கேக்' கண்காட்சியை யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் நேற்றுக் காலை வைபவரீதியாகத் திறந்துவைத்தார்.

'யோகிஹோம்சயன்ஸ்' அக்கடமியில் பயிலும் மாணவிகளின் கைவண்ணத்தில் உருவான முற்றிலும் கலைரசனையையும், கலைநுட்பத்தினையும் ஏற்படுத்தக்கூடிய வகையில் 'கேக்' வகைகள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு 'கேக்' வகைகளும் பல்வேறு வடிவங்களிலும், பல்வேறு நுணுக்கங்களையும் கொண்டதாக அமைந்திருந்தன.

இந்தக் கண்காட்சி தொடர்ந்து 4 தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி தொடர்பாக யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமியின் நிர்வாக இயக்குநரும், ஆசிரியருமான திருமதி யோகினி சண்முகநாதன் கருத்துத் தெரிவிக்கையில்:

எனது இந்த நிறுவனத்தை சுமார் 20 வருடங்களாக நடத்தி வருகின்றேன்.



என்னிடம் அழகுக்கலை, 'கேக்' ஐசிங் போன்ற பயிற்சிகளைப் பெற்ற மாணவிகள் புலம்பெயர் நாடுகளிலும் வசித்து வருகிறார்கள்.

அவர்கள் அங்கு இத்தகைய துறைசார் பயிற்சிகளை வழங்கி வருகிறார்கள் என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது.

எமது நிறுவனத்தின் மற்றுமொரு கிளை கொழும்பில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனை எனது மகள் ஒருவர் இயக்கி வருகின்றார்.

இந்தத்துறைசார் விடயங்களை கொழும்பிலும், இந்தியாவிலும் படித்து அதில் நிறைவான அறிவைப் பெற்றதும் நான் தனியாக இந்த அக்கடமியினை ஆரம்பித்து இன்றுவரை நடத்திக் கொண்டிருக்கிறேன்.

இந்த மண்டபத்தில் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள 'கேக்' வகைகள் எனது மாணவிகளின் கைவண்ணத்தில் உருவானவை. கிட்டத்தட்ட ஒரு மாதத்துக்கு முன்னர் அவர்களுக்குரிய விடயங்களைக் கொடுத்து விட்டேன். அவர்கள் ஒவ்வொரு தடவையும் இவற்றைச் செய்து என்னிடத்தில் காட்டுவார்கள். அதில் சிறிய பிழை இருந்தால்கூட அதனை மீண்டும் செய்யத் தூண்டுவேன்.

அவர்கள் நுணுக்கமான முறையில் சுயமாக இவற்றைச் செய்யும்வரை நான் பயிற்சியளித்தேன்.

தற்போது 20 மாணவிகள் என்னிடம் தமது மூன்றுமாத பயிற்சியினை நிறைவு செய்து வெளியேறுகிறார்கள்.

இவர்கள் நிறைவான முறையில் தமது துறைசார் பயிற்சிகளை முடித்து இங்கிருந்து வெளியேற வேண்டும் என்பதே விருப்பமும் நோக்கமுமாக உள்ளது.

இந்தக் கண்காட்சியின் பிரதான நோக்கம் என்னவென்றால், எமது மாணவர்களின் திறமைகளை, கைவண்ணங்களை அனைவரும் அறிய வேண்டும் என்பதுதான். இதனைப் பார்வையிடுவோர் தாமும் இதனைப் பயில வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்களாகவும் இருப்பர்.

இதன்மூலம் எமது சமுதாயத்தை கலைநயம் மிக்க சமுதாயமாக மாற்ற வேண்டும் என்பதே எனது நோக்கம்.

இந்தத் துறையானது நுட்பமானது, நுணுக்கமானது. அதனை அரைகுறையாகப் படித்துவிட்டு வெளியில் சென்று தொழில் செய்வது சிறந்ததல்ல என்பது எனது கருத்து.

குறிப்பாக சிலர் இரண்டு அல்லது மூன்றுநாள் கருத்தரங்குகளில் பங்குபற்றிவிட்டு தாமாக, சுயமாக ஏனையோருக்கு இதனைப் பயிற்றுவிக்கத் தொடங்குகின்றனர். இந்தத் துறையின் நுணுக்கங்களை, நுட்பங்களை நன்கு அறிந்து அதில் தேர்ச்சி பெற்று தொழிலை ஆரம்பித்தால் அதுமிகவும் நன்றாக இருக்கும் என்பது என் கருத்தாகும்.

இன்றைய இக்கண்காட்சியில் அனைவரும் பங்குபற்றி அதன் முழுப்பலனையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்-என்றார்.

## தனது விருப்பத்தை மனந்திறந்து கூறுகிறார் அழகுக்கலை நிபுணர் திருமதி யோகினி சண்முகநாதன்

**- நேர்காணல்:- கவிநேசன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட

**செல்லையா ஏகாம்பரம்** (சாம்பு)

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு நாம் மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

இறுப்பிட்டி மூத்தநயினார் புலம் வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரும்,
இறுப்பிட்டி ச.ச.நிலையத்தினரும்.

(86178)

# விற்பனைக்கு

வீடியோக் கடைக்குரிய தளபாடங்கள், கண்ணாடி இணைப்புக்கள், சீ.டிக்கள், சீடி பிளேயர் ஒலிப் பதிவுச் சாதனங்கள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: **சசித ஒலிப்பதிப்பகம்,**
இல.305, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.

(86081)

# வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் உல்லாச விடுதிக்கு
* விருந்தி முகாமையாளர் (மும்மொழியும் தெரிந்தவர்)
* உணவு பரிமாறுபவர்

தகுதியுடையோர் 15.06.2009 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரை நேரில் வரவும்.

**கிறீன் இன் ரெஸ்ரோரன்ட்**
இல.60, கண்டி வீதி,
கண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

(86082)

# ஆற்றொணாத் துயருடன் 31ஆம் நாள் நினைவில்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 . 07 . 1939 | 14 . 05 . 2009 |



## திருமதி நாகரத்தினம் செல்வநாயகம்

அன்பையே அணியாய் ஆர்வமே தொனியாய்
ஐவரைப் பெற்று நீ வளர்த்தனை செழிப்பாய்
இன்பமே எம்மைச் சூழ்ந்திட வென்றே
ஏணியாய் இருந்துநீ சேவைகள் செய்தனை
நன்மைசேர் வழியில் எமையெலாம் நடத்தி
நன்னெறி காட்டிய நிந்தனின் இழப்பால்
துன்பமாம் சோகக் கடலினில் மூழ்கி
துடிக்கின்றோம் துவள்கின்றேம் ஆறுதல் இன்றி.

**நின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில். (86190) **குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



## அமரர் இராமலிங்கம் பிரபாகரன்

(நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்,
உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், கண்டாவளை)

**தோற்றம்: 02.02.1978 மறைவு: 13.05.2009**

நண்பா!
போட்டிகளில் திறன் தந்தாய்
வெற்றிகள் பல தேடித் தந்தாய்
கல்வியிலும், அறிவிலும் திகழ்ந்தாய் - உன்
புன்னகைச் சிரிப்பில் எமையெல்லாம் மகிழ்வித்தாய்
பாதியில் எம்மைவிட்டு எங்கே சென்றாய்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

விவேகானந்தா விளையாட்டுக் கழகம்,
தும்பளை, பருத்தித்துறை.

(சி/558963)



**சமய சந்நிதிகளில்**

யாழ்ப்பாணம்,ஜூன்13

புங்குடுதீவு மேற்கு, இறுப்பிட்டி, பெரிய புலம் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 13

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய யாத்திரைத் தல விழா நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்.ஆயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முதல் திருப்பலி காலை 5.30 மணிக்கும், திருநாள் திருப்பலி காலை 7.15 மணிக்கும் நடைபெறும். இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நற்கருணைத் திருவிழா நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்13

அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 13

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழா இடம்பெறவுள்ளது.

ஆலயப் பெருந்திருவிழா கடந்த 4ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று வருகிறது. (203-250)

* * *


யாழ்ப்பாணம், ஜூன் 13

காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (203-250)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 . 02 . 1929 | 14 . 05 . 2009 |



## அமரர் அப்பாக்குட்டி முருகேசு

மாநிலத்தில் நாம் மகிழ்வுடன் வாழ்ந்திட
என்றும் உழைத்திட்ட எம்மன்புத் தெய்வமே!
எத்தனை நாள் மண்ணில் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவெம் உள்ளம் விட்டுப் போகாது.

மீசாலை மேற்கு, மீசாலை. [illegible]

(86155)

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் குமாரசாமி

(முன்னாள் தலைவர், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்)



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் குமாரசாமி நேற்றுமுன்தினம் 11.06.2009 வியாழக்கிழமை இரவு இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் தவசி - காலஞ்சென்ற காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் விஜிதா (இந்தியா), றெஜிதா (லண்டன்), கவிதா (கனடா), ஜெனிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜன் (இந்தியா), தர்மசீலன் (லண்டன்), டெல்வின் (கனடா), மனோதீசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் சம்பூரணம் (லண்டன்), சவுந்தரம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பட்டினசபை ஒழுங்கை,
மானிப்பாய்.

தற்போதைய முகவரி:
T.ராஜன்,
12/83, கண்ணதாசன் சாலை,
முகப்பேர் கிழக்கு, சென்னை - 37.
T.P: 00914426567097

தகவல்:
த.செல்வராசா (சகலன்),
த.கோபாலசிங்கம் (மைத்துனன்).

(86184)

## ஆறுமுகம் மகேஸ்வரன்



தெல்லிப்பழை, மாத்தனையைப் பிறப்பிடமாகவும் முன்னர் நைஜீரியாவையும் பின்னர் கொழும்பையும் வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான ஆறுமுகம் மகேஸ்வரன் [கணனிப் பொறியியலாளர் - IBM நிறுவனம் (1970 - 1980)] அவர்கள் 11.06.2009 வியாழக்கிழமை அன்று கண்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் - நேசமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெகபாலினியின் அன்புக் கணவரும் பிரசாத், கோபிநாத், பிந்துஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோமாதேவி ஜெகதீஸ்வரன், கௌரிதேவி, ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் முரளிதரன், வித்தியாதரன், தேவிகா ஆகியோரின் அன்பு மாமனும் திவ்யா, பிரதீப் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கண்டியிலுள்ள நுவர மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இன்று (13.06.2009) சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு மஹிய்யாவ மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாதன், உடுவில்.
0812223760

சேச் லேன், உடுவில். (86179)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவுக்கு அதிகமான மக்கள் நலன்புரி முகாம்களில் அவதிப் படுகின்றார்கள்

இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்காக அரசாங்கத்தினால் நடத்தப்படும் பெரிய நலன்புரி நிலையத்தில் உள்ள நிலைமைகள் சிறிதளவு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இன்னமும் திருப்தியற்ற முறையிலேயே காணப்படுகின்றன என்று இலங்கையிலுள்ள ஐ.நா. ஐ.அர்.ஐ.என் அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'அடிப்படைப் பிரச்சினை என்னவென்றால் மிகவும் சிறியதான இடத்தில் அதிகளவில் மக்கள் இருக்கின்றார்கள். அதுதான் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலகிலேயே மிகப்பெரிய முகாம் என்று நான் கருதுகின்றேன்' என்றார் நீல் புஹுனே என்ற அந்த அதிகாரி.

மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட பிராந்திய தகவல் வலைப்பின்னல் ஆகியவற்றின் கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகத்தின் வதிவிட ஒருங்கிணைப்பாளராக இருப்பவர் நீல் புஹுனே. இவர்களின் தகவல்களின் படி கடந்த இரண்டு மாதங்கள் மாத்திரம் 210 ஆயிரம் இடம் பெயர்ந்த மக்கள் இந்த முகாமில் வந்து நிரம்பியிருக்கிறார்கள். நிலைமைகளைச்

## மனிக்பாம் பகுதிக்குச் சென்று திரும்பிய ஐ.நா.பிரமுகர் தரும் விவரங்கள்

சமாளிப்பதில் உதவிவழங்கும் முகவர்கள் பெரும் திண்டாட்டங்களுக்குள்ளாகியுள்ளனர்.

வடஇலங்கையில் வவுனியா நகருக்கு வெளியில் 500 ஹக்டயர் நிலப்பரப்பில் மனிக் பாம் என்றழைக்கப்படும் இந்த முகாம் அமைந்துள்ளது.மோதல் இடம் பெற்ற பகுதிகளிலிருந்து உயிர்தப்பி ஒடி வந்த 220 ஆயிரம் பேர் இந்த முகாமில் தஞ்சமடைந்துள்ளார்கள். ஜூன் 5ஆம்திகதிக்குப் பின்னர் 6500 அவசர தங்குமிடங்களும், 13 ஆயிரத்துக்கு மேலான தற்காலிக கூடாரங்களும் ஐ.நா.அகதிகளுக்கான முகவர் அமைப்பினாலும் அதன் சார்பு அமைப்புக்களினாலும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை போதுமானவையாக இல்லை. இன்னும் தேவைப்படுகின்றன.

### 5 பேருக்கான இடத்தில் 10-15 பேர் இருக்கின்றார்கள்.

புஹுனே சமீபத்தில் குறித்த முகாமுக்கு விஜயம் செய்து விட்டுத் திரும்பியுள்ளார். ஐந்து பேருக்கென அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களில் 10-15பேர் அடைந்து கிடப்பதைப் கண்டதாக அவர் கூறினார். மேலும் அபிவிருத்தி ஏற்படும் என்று நம்புவதாகக் கூறினார்.

தண்ணீர் மற்றும் கழிவிட வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. ஆனால் சில இடங்களில் ஒரு கழிவறையினை 100 பேர் பாவிப்பதைக் காண முடிந்தது. இவை 20 பேருக்கே போதுமானது. சில கிடங்குக் கழிவறைகள் 2008 ஆம் ஆண்டு நவம்பரில் இந்த முகாம் ஆரம்பிக்கப்பட்ட போது உருவாக்கப்பட்டவையே இப்போது நிரம்பி வழிகின்றன, மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்துகின்றன.

நிலைமை என்னவென்றால் மக்கள் சமாளிக்கின்றார்கள் ஆனால் இந்த வசதிகள் எந்தவிதத்திலும் போதுமானவையாக இல்லை என்று மேலும் கூறினார் புஹுனே.

### தண்ணீர் கழிவறை பற்றாக்குறை

கழிவறைகள் மற்றும் தண்ணீர் பற்றாக்குறையும் இடைவெளியும் மிகமோசமாக இருக்கின்றது என்று கூறினார் சோலிடார் அமைப்பின் தலைவர் றிச்சாட் ஸிமித். வருட மத்தியிலான தமது விமரிசன அறிக்கையில் இதை அவர் தெரிவித்துள்ளார்.

### தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து

ஏற்கனவே முகாம்களில் சின்னம்மை தொற்றுக் காணப்படுகின்றது. கல்லீரல் வீக்கம், வயிற்றோட்டம் போன்றவையும் தோன்றியுள்ளன. தண்ணீர் போதுமானதாகக் கிடைக்காவிட்டாலும் கழிவறை வசதிகள் குறைந்தாலும் இந் நோய்கள் பரவு

## போதிய அளவு தண்ணீரும் கழிவறைகளும் இல்லாமை பெரும் குறைபாடாகும்

வது வழக்கம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

வேள்ட்விஷன் தெரிவித்துள்ள கருத்தில் அரசினால் அமைக்கப்பட்டுள்ள 40க்கும் மேற்பட்ட முகாம்களில் தண்ணீர் மற்றும் கழிவறைப் பற்றாக்குறையே பிரதான பிரச்சினையாக இருக்கின்றது. இடம்பெயர்ந்தோர் வாழ்கின்ற பெரிய முகாம்களில் கழிவறை பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. உடனடியான மிகக் குறைந்தபட்ச தரங்களைப் பேணுவதற்கு மேலும் 11500 கழிவறைகளாவது தேவைப்படுகின்றன என்று அவ் அமைப்பு தெரிவித்துள்ளது: சுகாதார நெருக்கடி ஒன்றைத் தவிர்பதானால் உடனடியாக குறைந்தது 2500 கழிவறைகளாவது அமைக்கப்பட வேண்டும் என்கிறது அவ் அமைப்பு.

### உணவுப் பகிர்வுக்கு பணம் தேவை

முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு போதுமான அளவு உணவுவகைகள் கிடைத்துவருகின்றன. ஆனால் அதனை உறுதிப்படுத்துவதற்கு மாதம் 5 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப் படுகின் றது என்று உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது. உணவு விநியோகம் தடைப்படாமல் இருப்பதற்கு தேவையான நிதி வழங்களை அது எதிர்பார்ப்பதாக அறிவித்துள்ளது.

இந்த வருடத்துக்கான உணவு விநியோகத்துக்கென 35 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது. இந்தப் பணம் உடனடியாக எமக்குத் தேவை. ஏனென்றால் உணவுப் பொருள்களை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு 3 - 6 மாதங்கள் பிடிக்கும். உலக உணவுத் திட்டத்தைச் சேர்ந்த அதிகாரி அடனன்கான் இவ்வாறு தெரிவித்துளார்.

குழந்தைகளுக்கான போஷாக்கு உணவும் தாய்மார்களுக்கான உணவும் இன்னமும் பிரச்சினைகளாகவே இருக்கின்றன. சில அமைப்புகளுக்கு அவர்களின் வாகனங்கள் முகாம் பாகுதிகளுக்குள் வருவது கட் டுப்படுத்தப் படுவதால் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

கடந்த சில வாரங்களில் உதவி வழங்கும் அமைப்புக்கள் முகாம் பகுதிகளுக்கு செல்வதில் இருந்த கட்டுப்பாடு ஓரளவு தளர்ந்துள்ளது. உணவு விநியோகம், மருந்து மற்றும் கட்டுமானப் பொருள்கள் எடுத்து வருவதில் பிரச்சினை இல்லை ஆனால் கலந்துரையாடல்கள் பாதுகாப்புத் திட்டங்கள் போன்றவைக்கு தட்டுப்பாடு இருக்கின்றது. இன்னொரு முக்கிய பிரச்சினை குப்பை கூழங்களை அப்புறப்படுத்துவது என்று கூறினார் புஹுனே. (ப)

---

## மனோகரார் சந்தியில் விபத்து வைத்தீஸ்வரா மாணவர்கள் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்.மனோகராச் சந்தியில் நேற்று நண் பகல் ஒருமணியளவில் இடம் பெற்ற விபத்துச்சம்பவத்தில் இரு மாணவர்கள் காயமடைந்தனர். அவர்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவர்களான பி.வீஷ்மன் (வயது13), எம்.சஜீபன் (வயது15) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

வீஷ்மனுக்கு கை முறிந்துள்ளதாகவும் சஜீபனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன

பாடசாலை முடிந்து சீனியர் வீதியில் உள்ள தமது வீட்டுக்கு அவர்கள் சைக்கிளில் கே.கே.எஸ். வீதி ஊடாகச் சென்று கொண்டிருந்த போது அந்த வீதி வழியாக வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-25)

## தென்மராட்சியில் இன்று அனுபவப் பகிர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9 வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோருக்கான சமூக இணக்கப்பாட்டு அனுபவப் பகிர்வு நிகழ்வுகள் இன்றும் நாளையும் கொத்தணி ரீதியாக நடத்தப்படவுள்ளன.

பன்மைச் சமூகங்களுடன் வாழ்ந்த அந்தந்தப் பகுதி பிரமுகர்கள் கல்வி மான்கள் தமது அனுபவங்களை இந்த நிகழ்வுகளில் விளக்கவுள்ளனர்.

இன்று கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, வரணி ம.வி ஆகியவற்றிலும் நாளை கச்சாய் அ.த.க.பாடசாலை, மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி ஆகியவற்றிலும் இந்த நிகழ்வுகள் இடம் பெறும். (203-207)

## சர்வதேச ரீதியில் பன்றிக் காய்ச்சல் அபாயம் உலக சுகாதார நிறுவனம் பகிரங்க எச்சரிக்கை

### இதுவரை 74 நாடுகளில் பரவியுள்ளது

கொழும்பு, ஜூன் 13

சர்வதேச ரீதியில் பன்றிக்காய்ச்சல் அபாயம் குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் அவசரக் கூட்டத்தின் பின்னர் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் மெக்சிக்கோவில் இனங்காணப்பட்ட பன்றிக்காய்ச்சல் 74 நாடுகளில் பரவியுள்ளது எனவும், 30 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் 141 பேர் இதனால் மரணமடைந்துள்ளனர் எனவும் சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

பன்றிக்காய்ச்சல் உலகில் இரு பிராந்தியங்களில் வேகமாகப் பரவி வருவதாகவும் பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஜப்பான், சிலி ஆகிய நாடுகளில் அதிகளவானோர் இக்காய்ச்சலுக்கு பாதிக்கப்பாட்டுள்ளார்கள் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் பன்றிக்காய்ச்சல் காரணமாக அதிகளவில் மரணம் அல்லது பாதிப்பு ஏற் படாது என உலகசுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

21 ஆம் நூற்றாண்டின் முதலாவது உலகளாவிய ரீதியிலான தொற்றும் காய்ச்சல் இதுவென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், எல்லைகளை மூடவேண்டும் அல்லது மக்கள், குறித்த பொருள்கள் சேவைகளின் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டுமென உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தவில்லை. எவ்வாறாயினும் நிலைமை எந்நேரமும் உடனடியாக மாறலாம் என்ற எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

---

## அகதிகளை மீளக் குடியமர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைக் கண்காணிப்பகம் விடுத் துள்ளது.

பருவப் பெயர்ச்சி மழை காரணமாக முகாம்களில் காணப்படும் நிலை மேலும் மோசமடையலாம் என்றும் எச்சரித்துள்ள சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம், இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சமீபத்தைய மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த 3 லட்சம் தமிழர்களை சட்ட விரோதமாகத் தடுத்து வைத்திருப்பதை இலங்கை அரசு முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக இலங்கை அரசு சர்வதேச சட்டங்களை மீறி மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த அனைவரையும் இராணுவத்தால் நடத்தப்படும் முகாம்களில் குடும்பம் குடும்பமாக தடுத்து வைத்துள்ளது.

இவ்வருட இறுதிக்குள் அனைவரும் தத்தமது பகுதிகளில் மீளக் குடியமர்த்தப் படுவர் என அரசு தெரிவித்துள்ள போதிலும் கடந்த கால செயற்பாடுகளும் உறுதியான திட்டம் எதுவும் இல்லாததும் இந்த மக்கள் காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்படலாம் என்ற அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

முகாம்களிலுள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரையும் விடுதலைப் புலிகள் எனக் கருதி நடத்துவது தேசிய அவமானம் என சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு ஏனைய இலங்கைப் பிரஜைகள் போல நடமாடுவதற்கான சுதந்திரம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நடைபெற்ற பகுதிகளிலிருந்து வருபவர்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் உள்ளனரா என்பதை உறுதி செய்வதற்கு இலங்கை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

அதேவேளை, கண்மூடித்தனமாகத் தடுத்து வைப்பதும் தேவையற்ற விதத்தில் நடமாட்ட சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதும் சர்வதேச சட்டங்களின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளன.

விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்படும் எவரும் நீதிவான் ஒருவரின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட வேண்டும். அல்லது குற்றச்சாட்டு சுமத்தப்பட வேண்டும். அல்லது விடுதலை செய்யப்பட வேண்டும்.

[illegible] காரணங்களுக்காக நடமாட்ட சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதை மனித உரிமை சட்டங்கள் அனுமதித்தாலும் இதனைத் தெளிவான சட்ட அடிப்படையில் செய்ய வேண்டும். 2008 மார்ச் மாதம் முதல் விடுதலைப் புலிகளின் பகுதியிலிருந்து வந்த அனைவரையும் இலங்கை அரசு நலன்புரி நிலையங்களிலும் தற்காலிக அகதி கிராமங்களிலும் தடுத்து வைத்துள்ளது.

சிறியளவானவர்கள் முக்கியமாக வயோதிபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். எனினும் பெருமளவானவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் 40 முகாம்களில் 2 லட்சத்து 78 ஆயிரத்து 203பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள பலரின் உறவினர்கள் அந்தப் பிராந்தியத்திலேயே உள்ளனர். அனுமதிக்கப்பட்டால் அவர்களுடன் இவர்கள் சேர்ந்து வாழ முடியும்.

பலர் போக வேறு இடமில்லாததால் முகாம்களில் இருக்கவில்லை, அரசு அனுமதிக்காததாலேயே முகாம்களில் உள்ளனர் என பிரட் அடம்ஸ் சுட்டிக்காட்டுகின்றார்.

மன்னாரிலிருந்து இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்கள் மே மாதத்திலேயே அரசு அனுமதித்த பின்னர் முகாம்களிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டனர்- என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவில் இலங்கையின் இராணுவத் தளம்; தடுத்து நிறுத்த வலியுறுத்துகிறது ம.தி.மு.க.

கிருஷ்ணகிரி, ஜூன் 13

கச்சதீவில் இராணுவத் தளம் அமைப்பதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. இது இந்தியாவிற்கும் தமிழகத்திற்கும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. எனவே, கச்சதீவில் இலங்கையின் அத்துமீறலை இந்திய அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் - என்று ம.தி.மு.க. வலியுறுத்தியுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்ட ம.தி.மு.க. இலக்கிய அணி செயலாளர் ருத்ரன் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இந்தியாவிற்குச் சொந்தமாகவிருந்த கச்சதீவு 35 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைக்கு வழங்கப்பட்டது. அப்போது ஏற்பட்ட ஒப்பந்தப்படி, கச்சதீவில் தங்கவும், மீன் வலைகளை உலர்த்திக் கொள்ளவும், கச்சதீவுப் பகுதியில் மீன் பிடிக்கவும் தமிழக மீனவர்களுக்கு உரிமை உள்ளது. மேலும் அங்குள்ள தேவாலயத்தில் வழிபாடு நடத்தவும் தமிழக மக்கள் உரிமை பெற்றுள்ளனர்.

ஆனால் சில ஆண்டுகளாக, இலங்கை அரசு ஒப்பந்தத்தை மீறி வருகிறது. தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொல்வதும், அவர்களின் படகுகளுக்கும் வலைகளுக்கும் சேதாரம் ஏற்படுத்துவதும், மீனவர்களைச் சிறைப்பிடித்து துன்புறுத்துவது போன்ற வன்முறை செயல்களில் இலங்கைக் கடற்படை ஈடுபட்டு வருகிறது. மேலும் கச்சதீவு தேவாலயத்தில் வழிபாடு நடத்தவும் தமிழக மக்களுக்குத் தடை விதித்துள்ளது.

இதற்குத் தீர்வுகண்டு, கச்சதீவில் தமிழர்களுக்கு உள்ள உரிமையை மீட்டுத்தருமாறு மத்திய, மாநில அரசுகளை தமிழக மீனவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். அதற்காக பல்வேறு தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கச்சதீவில் இராணுவத் தளம் அமைப்பதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. அப்பணியின் தொடக்கமாக 500இற்கும் மேற்பட்ட இலங்கை இராணுவத்தினர் கச்சதீவில் முகாமிட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

இது இந்தியாவிற்கு குறிப்பாக தமிழகத்திற்கும் தமிழக மீனவர்களின் வாழ்வுரிமைக்கும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகும். எனவே, கச்சதீவில் இலங்கையின் அத்துமீறலை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் - என்றுள்ளது.



திருப்பதி ஏழுமலையானுக்கு செய்யப்பட்ட 45 கோடி ரூபா மதிப்புள்ள வைரக் கிரீடம்....

# ஈழத் தமிழர்களுக்கு சமவுரிமை கிடைக்க ஒபாமாவைச் சந்தித்து வலியுறுத்துவேன்

## சுப்பிரமணியசுவாமி சொல்கிறார்



மதுரை, ஜூன் 13

கருணாநிதிக்கு இலங்கைத் தமிழர்கள் மீது எந்த அக்கறையும் இல்லை. இலங்கைத் தமிழர்களுக்குச் சம உரிமை அளிப்போம் என்று மஹிந்த ராஜபக்ஷ அளித்த உறுதிமொழியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்படி அமெரிக்க ஜனாதிபதியைச் சந்தித்து வலியுறுத்துவேன்.


- இவ்வாறு ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

என் மீது முட்டை வீசிய சட்டத்தரணிகளை பார் கவுன்ஸிலில் இருந்து நீக்க வேண்டும் என்றும், அந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட சட்டக் கல்லூரி மாணவர்களை கல்லூரியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் தனியாக ஒரு மனுத் தாக்கல் செய்யவுள்ளேன். பொதுமக்களுக்கு சேவை செய்யவே சட்டத்தரணிகள் உள்ளனர். ஆனால் அவர்கள் முட்டை வீச்சு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டு தங்களை அவமானப்படுத்துகின்றனர்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் 2 விடயங்கள் தெளிவாகின்றன. சட்டத்தரணிகள் மீது பொலிஸார் எடுத்த நடவடிக்கைக்கு 84 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளனர்.

கருணாநிதிக்கு இலங்கைத் தமிழர்கள் மீது எந்த அக்கறையும் இல்லை. இலங்கை தமிழர்களுக்குச் சம உரிமை அளிப்போம் என்று மஹிந்த ராஜபக்ஷ அளித்த உறுதிமொழியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்படி அமெரிக்கா, சீனா, இஸ்ரேல் நாட்டு ஜனாதிபதிகளைச் சந்தித்து வலியுறுத்துவேன் - என்றார்.




ஆஸ்திரேலியாவில் இந்திய மாணவர்கள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து டில்லியில் இளைஞர் காங்கிரஸ் சார்பில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடந்தது. அதில் கலந்துகொண்டவர்கள் ஆஸ்திரேலிய அரசைக் கண்டித்து கோஷமிட்டபோது........

# திருப்பதி ஏழுமலையானுக்கு 45 கோடி ரூபாவில் வைரக்கிரீடம்

## கர்நாடக அமைச்சர் காணிக்கை

நகரி, ஜூன் 13

திருப்பதி ஏழுமலையானுக்கு 45 கோடி ரூபா மதிப்புள்ள வைரக் கிரீடத்தை கர்நாடக சுற்றுலா துறை அமைச்சர் காலி ஜனார்த்தன ரெட்டி காணிக்கையாக வழங்கினார்.

பிரபல தொழில் அதிபரான அமைச்சர் காலி ஜனார்த்தன ரெட்டி, கடந்த புதன்கிழமை குடும்பத்தினருடன் திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்குச் சென்று சாமி கும்பிட்டார்.

இரவில் பத்மாவதி விருந்தினர் மாளிகையில் தங்கிய அவர் நேற்றுமுன்தினம் காலை, ஏழுமலையான் கோவிலுக்கு 45 கோடி ரூபா மதிப்புள்ள வைரக் கிரீடத்தை காணிக்கையாக வழங்கினார். திருப்பதி திருமலை தேவஸ்தான சிறப்பு நிர்வாக அதிகாரி எ.வி.தர்மாரெட்டி, அவரிடம் இருந்து வைரக் கிரீடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இரண்டரை அடி உயரம் உள்ள இந்தக் கிரீடம், ஏறத்தாழ 34 கிலோ எடை கொண்டதாகும். 2 ஆண்டுகள் கால திருப்பதி ஏழுமலையான் கோவில் வரலாற்றில், நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஏராளமான பொருள்களை காணிக்கையாக வழங்கி இருக்கிறார்கள்.

இந்த நூற்றாண்டில் செலுத்தப்பட்ட காணிக்கைகளில் இதுவரை 10 கோடி ரூபா மதிப்புள்ள காணிக்கைதான் அதிக மதிப்புமிக்கதாக இருந்தது. தற்போது கர்நாடக அமைச்சர் வழங்கிய 45 கோடி ரூபா வைரக் கிரீடம்தான் இதுவரை வந்த காணிக்கைகளில் மிகவும் விலை உயர்ந்தது என்று கோவில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மண்டபம் மீண்டனர் மாயமான மீனவர்

பனைக்குளம், ஜூன் 13

மண்டபத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்று மாயமான 4 மீனவர்களும் பத்திரமாக கரை திரும்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மண்டபம் பகுதியில் இருந்து கடந்த 3ஆம் திகதி 450இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். இதில் மண்டபத்தைச் சேர்ந்த அப்துல் வாகித் என்பவருக்கு படகில் சென்ற பிரப்பன்வலசையைச் சேர்ந்த அஜ்மல்கான், அன்சாரி, வாகித், சேக் ஆகியோர் மட்டும் கரை திரும்பவில்லை. இதைத் தொடர்ந்து மீனவ சங்கப் பிரதிநிதிகள் மீன்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினர்.

ஆனால் மீனவர்களை தேடும் பணி தாமதமடைந்ததால் ஆத்திரமடைந்த மீனவர்கள் இராமேஸ்வரம் - மண்டபம் வீதியில் மறியலில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து அதிகாரிகள் அங்கு சென்று மறியலில் ஈடுபட்ட மீனவர் சங்க பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினர். அதன் பின்னர் அவர்கள் கலைந்து சென்றனர்.

இதுகுறித்து தாசில்தார் இந்திரஜித், மாவட்ட நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்ததுடன் மீனவர்களை மீட்க உடனடி நடவடிக்கையில் இறங்கினார். இந்நிலையில் கடலில் தத்தளித்த 4 மீனவர்களையும் வேதாரண்யம் அருகே எரிவாயு ஏற்றிச் சென்ற கப்பல் ஊழியர்கள் காப்பாற்றி பத்திரமாகக் கரை சேர்த்தனர். இதைத்தொடர்ந்து மீனவ சங்க பிரதிநிதிகள் வேதாரண்யம் சென்று 4 மீனவர்களையும் பத்திரமாக மண்டபம் அழைத்து வந்தனர்.




# தமிழக அணு விஞ்ஞானி மாயம்! தீவிரவாதிகள் கடத்தினார்களா?

வடகனரா, ஜூன் 13

கர்நாடகாவில் பணி புரிந்து வந்த தமிழகத்தைச் சேர்ந்த அணு விஞ்ஞானியை திடீரென்று காணவில்லை. அவரை தீவிரவாதிகள் கடத்தி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கர்நாடகக் கடலோரப் பகுதியான கார்வார் நகரில் உள்ள கைகா அணு மின் நிலைய விஞ்ஞானி மகாலிங்கம். இவர் தமிழகத்தைச் சேர்ந்தவர். அணுமின் நிலையத்தில் இருந்து 16 கிமீ தூரத்தில் உள்ள கைகா குடியிருப்பில் குடும்பத்துடன் வசித்து வந்தார்.

மகாலிங்கம், காலையில் நடைப் பயிற்சி செல்வது வழக்கம். கடந்த திங்கட்கிழமை நடைபயிற்சிக்குச் சென்ற அவர், வீடு திரும்பவில்லை. அதிர்ச்சியடைந்த அவரின் மனைவி விநாயக சுந்திரி, பொலிஸில் முறைப்பாடு கொடுத்தார்.

மகாலிங்கம் அணு விஞ்ஞானி என்பதால், பொலிஸார் அவரை ரகசியமாகத் தேடினர். 4 நாள்களாகியும் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இதையடுத்து, கைகா அணுமின் நிலைய பாதுகாப்பு அதிகாரி, மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளுடன் பொலிஸார் ஆலோசனை நடத்தினர். 40 பேர் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டு, மகாலிங்கத்தை கூட்டாகத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

# சேது திட்டத்தை விரைவில் நிறைவேற்றி முடிப்போம்..!

## முதலமைச்சர் கருணாநிதி உறுதி

சென்னை, ஜூன் 13

மத்திய அரசின் துணையோடு சேது சமுத்திரத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றி முடிப்போம் - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து வியாழக்கிழமை, விடியோ கான்பரன்சிங் மூலம் ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை தொடக்கிவைத்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

150 ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு, டி.ஆர். பாலுவின் முயற்சியால் தொடங்கப்பட்ட சேது சமுத்திரத் திட்டத்தின் 60 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. இந்நிலையில் சிலரது சூழ்ச்சியால் தடைப்பட்டுள்ள சேது சமுத்திரத் திட்டப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும்.



அதற்கான முயற்சிகளை புதிய மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். இத்திட்டத்தின் மூலம் இராமநாதபுரம் உட்பட தென் தமிழகம் முழுவதும் தொழில் வளர்ச்சி ஏற்படும். வேலைவாய்ப்புகள் பெருகும்.

எனவே மீண்டும் மத்தியில் [illegible] றுள்ள ஐக்கிய [illegible] துணையோடு விரைவில் நிறைவேற்றி முடிப்போம்- என்றார்.

# ஒரு வாரத்தில் ஒரு லட்சம் சி.டிக்கள்! 'கந்தசாமி' விற்பனையில் சாதனை...

சென்னை, ஜூன் 13

ஒரு வாரத்தில் ஒரு லட்சம் பாடல் சி.டிக்கள் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது விக்கிரம் நடித்த 'கந்தசாமி' படம்.

கலைப்புலி எஸ்.தாணு ஏராளமான பொருட்செலவில் தயாரிக்கும் படம் கந்தசாமி. சுசி கணேசன் இயக்கியுள்ளார். விக்ரம், ஸ்ரேயா உட்பட பலர் நடிக்கின்றனர். இதில் விக்ரம் அனைத்துப் பாடல்களையும் பாடியுள்ளார்.

இப்படத்தின் பாடல் வெளியீட்டு விழா கடந்த மாதம் நடந்தது. பாடல் வெளியான ஒரு வாரத்திலேயே ஒரு லட்சம் சி.டிக்கள் விற்பனையாகியுள்ளன.



இதுகுறித்து சோனி மியூசிக்கின் விற்பனை பிரிவு தலைவர் நந்தினி கூறும்போது -

பாடல்கள் விற்பனை குறைந்துள்ள நிலையில் [illegible] த்தின் பாடல்கள் இவ்வளவு விற்பனையாகியிருக்கின்றமை சாதனைதான். தெலுங்கிலும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இப்போது மேலும் ஒரு லட்சம் சி.டிக்களை தயாரிக்கிறோம் - என்றார்.

தற்போது ராவணன் படப் பிடிப்பில் இருக்கும் விக்ரமிடம் இதுகுறித்து கேட்டபோது -

ஆச்சர்யமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. இந்தப் படத்தின் பாடல்கள் 'கிட்'டாகி இருப்பதால் தொடர்ந்து பாடுவேனா என்பது தெரியாது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டத்தில் டில்சான், பந்துவீச்சில் மலிங்க ஜொலிப்பு 19 ஓட்டங்களினால் பாகிஸ்தானை வீழ்த்தியது இலங்கை

லண்டன், ஜூன் 13

ஐ.சி.சி. ருவெண்ரி-20 போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியை 19 ஓட்டங்களினால் வீழ்த்தியது இலங்கை அணி.



ஆட்ட நாயகன் டில்சா துடுப்பெடுத்தாடிய போது...

ஐ.சி.சி. ருவெண்ரி - 20 உலகக்கிண்ணத் தொடரின் சுப்பர் -8 சுற்றில் குழு 'எப்'க்கான போட்டியில் நேற்று இலங்கையணியும் பாகிஸ்தானும் லண்டனின் லோட்ஸ் மைதானத்தில் மோதின.இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை யணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இலங்கையின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டில்சானும் சனத்ஜெயசூரியாவும் களமிறங்கினர்.இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக பலமான அடித்தளம் ஒன்றை இட்டபோதும் (81) அடுத்து வந்த வீரர்கள் எவரும் சோபிக்கவில்லை.

ஜெயசூரியா 26 ஓட்டங்களைப் பெற்ற போது அப்ரிடியின் சுழலில் யூனுஸ்கானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். டில்சான் அதிரடியாக ஆடி 8 பௌண்டறிகளுடன் 46 ஓட்டங்களைப் பெற்றபோது அப்ரிடியின் பந்தில் 'போல்ட்' ஆனார்.

அணித்தலைவர் சங்கக்கார (15), ஜெயவர்த்தனா(19) என ஆட்டம் இழக்க சில்வா 8 ஓட்டங்களுடன் உமர்குல்லின் பந்தில் அக்மல்லிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அணிக்கு கைகொடுப்பார் என எதிர்பார்த்த முபாரக்கும் (5) 'ரன் அவுட்'டாக குலசேகர உமர்குல்லின் பந்தில் 'எல்.பீ. டபிள்யூ' முறையில் வெளியேறினார்.

மதியூஸ் 9 ஓட்டங்களுடனும் மலிங்க 2 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காது இருந்தனர். இலங்கை அணி 20ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.உதிரிகளாக 20 ஓட்டங்களைப் பாகிஸ்தான் வழங்கியது.

பாகிஸ்தான் சார்பில் பந்து வீசிய அப்ரிடி, உமர்குல், அஜ்மல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பாகிஸ்தான் அணியின் ஆரம்ப வீரர்களாக சல்மான்பட், அக்மல் ஆகியோர் களமிறங்கினர் பட் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் மத்தியூசின் பந்தில் 'போல்டாகி' வெளியேறினார். அக்மல் 5ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார். மலிக் 5பௌண்டறிகளுடன் 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மலிங்கவின் பந்தில் குலசேகரவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

தமது அபாரமான துடுப்பாட்டத்தை யூனுஸ்கான் 37 பந்துகளை எதிர்கொண்டு 4பௌண்டறிகளுடன் ருவன்ரி - 20 போட்டிகளில் தனது இரண்டாவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். நம்பிக்கை வீரர் மிஸ்பா உல் ஹக் 28 ஓட்டங்களுடனும் அதிரடி வீரர் அப்ரிடி ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்ததுடன் பாகிஸ்தானின் மூன்று வீரர்கள் ஓட்டமெதனையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

20 ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 19 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

இலங்கையணி சார்பில் பந்துவீசிய லசித் மலிங்க 3 விக்கெட்டுக்களையும் முரளிதரன் 2விக்கெட்டுக்களையும் மத்உதியூஸ், குலசேகர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்தினர்.

ஆட்டநாயகனாக இலங்கையணியின் டில்சான் தெரிவானார். (06)

## இன்றைய ஆட்டம்

**முதலாவது ஆட்டம்**

அணிகள் : மேற்கிந்தியத் தீவுகள் - தென்னாபிரிக்கா
மைதானம் : ஓவல்
நேரம் : மாலை 6 மணி

**இரண்டாவது ஆட்டம்**

அணிகள் : நியூஸிலாந்து - பாகிஸ்தான்
மைதானம் : ஓவல்
நேரம் : இரவு 10 மணி

# பங்களாதேஷ் பிரதமர் ஹசீனா மீதான வழக்குகளை மீளப்பெறுவதற்கு அரசு முடிவு

டாக்கா, ஜூன் 13

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிரான வழக்குகள் உட்பட 62 வழக்குகளை வாபஸ் பெறுவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. இந்த வழக்குகள் முந்தைய இடைக்கால அரசால் தொடுக்கப்பட்டவையாகும்.

முந்தைய இடைக்கால அரசால் தொடுக்கப்பட்ட வழக்குகளை மறு ஆய்வு செய்து வரும் உச்சமட்ட அதிகாரக் குழுவிடம் 824 மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இது வரை 113 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

ஊழல் மற்றும் இதர முறைப்பாடுகள் ஆகியவை தொடர்பாக தொடரப்பட்டுள்ள 62 வழக்குகளை மீளப் பெறுமாறு உச்சமட்ட அதிகாரக் குழு அரசுக்கு பரிந்துரை செய்தது. இதனை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த வழக்குகளில் பெரும்பாலானவை ஆளும் அவாமி லீக் தலைவர்களுக்கு எதிரானவை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும், ஷேக் ஹசீனாவின் அரசியல் எதிரியான பங்களாதேஷ் தேசியக் கட்சித் தலைவி பேகம் கலீதா ஷியா உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிரான வழக்குகள் எதையும் திரும்பப் பெற இந்தக் குழு பரிந்துரை செய்யவில்லை.

முந்தைய இடைக்கால அரசின் ஆட்சியின் போது அரசியல் ரீதியாக துன்புறுத்துவதற்காகவே இந்த 62 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என தெரியவந்துள்ளது என உச்சமட்ட அதிகாரக் குழுவின் தலைவரும், பங்களாதேஷ் சட்ட அமைச்சருமான கம்ருல் இஸ்லாம் டாக்காவில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிரான ஊழல் வழக்கு ஒன்றைத் திரும்பப் பெற சிறப்பு நீதிமன்றம் கடந்த மாதம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெளியேற்றப்பட்ட தொண்டு நிறுவனங்களை புதிய பெயர்களில் திரும்புமாறு சூடான் அழைப்பு

ஐ.நா., ஜூன் 13

சூடானிலிருந்து மார்ச் மாதம் வெளியேற்றப்பட்ட நான்கு மனிதாபிமான உதவி நிறுவனங்களிடம் புதிய குழுக்களை, புதிய பெயர்களில் அனுப்பி வைக்குமாறு சூடானிய அரசு கேட்டுள்ளது என ஐ.நா. மனிதாபிமான சேவைக்கான உயர்மட்ட அதிகாரியொருவர் வியாழக்கிழமை தெரிவித்தார்.

சூடானிய மேற்கு டாபூர் பிராந்தியத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக, சூடானிய ஜனாதிபதி ஒமர் ஹஸன் அல்-பஷீர் மீது போர்க்காலக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இவை தொடர்பான விசாரணையை ஐ.நாவின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மேற்கொண்டது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணை முடிவில், ஒமர் ஹஸன் அல்-பஷீரை குற்றவாளியாகத் தீர்த்து அவரைக் கைது செய்வதற்கான பகிரங்கப் பிடியாணை பிறப் பித்தது. இதனால் ஆத்திரமடைந்த பஷீர் மார்ச்சில் 13 வெளிநாட்டு மனிதநேய உதவி நிறுவனங்களை நாட்டைவிட்டு வெளி யேறுமாறு உத்தரவிட்டார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு தம்மைப் பற்றிய இரகசிய தகவல்களை இந்நிறுவனங்களே அளித்து வந்துள்ளன என்றும் இவற்றிலுள்ளவர்கள் அனைவரும் உளவாளிகள் என்றும் இவர் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டி வந்தார். இவரின் உத்தரவை அடுத்து, இந்நிறுவனங்கள் வெளியேறிவிட்டன.

தற்போது இவற்றில் நான்கு நிறுவனங்களுக்கு ஜனாதிபதி பஷீர் அழைப்பு விடுத்துள்ளார். டாபூர் பிராந்தியத்தில் இடம்பெற்று வந்த மோதல்களில், 3 இலட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். 2 கோடியே 70 இலட்சம் மக்கள் வெளியேறியும், பலவந்தமாக வெளியேற்றப்பட்டுமுள்ளனர் என ஐ.நா.கணிப்பீடு செய்துள்ளது.



நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஈரானிய ஜனாதிபதித் தேர்தலில் ஈரானிய ஜனாதிபதியும், வேட்பாளர்களில் ஒருவருமான மஹ்மூத் அஹ்மதிநிஜாத், தலைநகரான தெஹ்ரானில் தமது வாக்கை அளிக்கும் போது....

# தீவிரவாதிகளின் வன்முறைகள் ஆப்கானிஸ்தானில் அதிகரிப்பு

## அமெரிக்க இராணுவ வட்டாரம் தகவல்

வாஷிங்ரன், ஜூன் 12

ஆப்கானிஸ்தானில் என்றுமில்லாதவாறு இவ்வாண்டு தீவிரவாதிகளின் வன்முறைகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. ஜனவரி முதல் மே வரை 5 ஆயிரத்து 222 வன்முறைகள் இடம்பெற்றுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

2008 ஆம் ஆண்டு முதல் ஐந்து மாதங்களில் 3 ஆயிரத்து 283 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வருட முதல் ஐந்து மாதங்களில் இந்த எண்ணிக்கை 59 சதவீதமாக உயர்வடைந்துள்ளது என அமெரிக்க இராணுவ அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

2007 ஆம் ஆண்டு முதல் 5 மாதங்களில் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை 25 சதவீதமாகவும், 2008 ஆம் ஆண்டு முதல் 5 மாதங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை 35 சதவீதமாகவும் உயர்ச்சி கண்டுள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

''ஆப்கானின் வரலாற்றிலேயே கடந்த வாரம்தான் [illegible] அசம்பாவிதங்கள் உச்சமட்டத்தை எட்டியுள்ளன'' என இராணுவ ஜெனரல் டேவிட் பெட்ராயஸ் தெரிவித்துள்ளார். இவர் மத்திய கிழக்கு, மத்திய ஆசியா ஆகியவற்றின் இராணுவ உபாய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாளராகவும், அமெரிக்க மத்திய கட்டளைப் பணியகத் தலைவராகவுமிருக்கிறார்.

2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க்கிலும், வாஷிங்ரனிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்கள் அல்-குவைதா தீவிரவாத இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்டவை என்ற தகவல் பின்னர் வெளியாகியது. அச்சமயம் அல்-குவைதா தலைவர் பின்லேடன் ஆப்கானிஸ்தானில் இருந்தார்.

ஆப்கானிஸ்தான் தலிபான் ஆட்சியாளர்களிடம் [illegible] பின்லேடனை தன்னிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா கோரிக்கை விடுத்தது. இதை தலிபான் ஆட்சியாளர்கள் அலட்சியப்படுத்திவிட்டனர். இதையடுத்து, 2001 ஆம் ஆண்டு ஆப்கான்மீது அமெரிக்கா படையெடுத்து தலிபான் ஆட்சியைக் கவிழ்த்தது.

பதவி கவிழ்க்கப்பட்ட தலிபான்களும், அல்-குவைதா அமைப்பினரும் அது முதல் அமெரிக்கப் படைகளுக்கு எதிராகவும், அமெரிக்காவின் அனுசரணையோடு இயங்கி வரும் ஆப்கான் அரசுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இவர்களை ஒடுக்க மேலதிக துருப்புகளை அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஆப்கானிஸ்தானில் ஏறத்தாழ 32 ஆயிரம் துருப்புகள் நிலைகொண்டிருந்தன. இந்த எண்ணிக்கை பின்னர் 56 ஆயிரம் ஆக உயர்த்தப்பட்டது. அது குறித்து பெட்ராயஸ் குறிப்பிடுகையில், இந்த எண்ணிக்கை 68 ஆயிரமாக உயர்த்தப்படலாம் என தாம் எதிர்பார்க்கிறார் என தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# அகதிகளை முகாம்களில் தடுத்து வைத்திருப்பதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**மாற்றுக்கொள்கை நிலையத்தின் மனு**

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் நலன்புரி நிலையங்களில் அவசர காலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மனுத் தாக்கல் செய்துள்ளது.

இந்த மனுவை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்துவின் சட்டத்தரணி நிலாந்தி டி.சில்வா நேற்றுத் தாக்கல் செய்தார்.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் உள்ளவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் அவசரகாலச்சட்டத்தின் 19(1) என்ற விதியின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இது சட்ட விரோதமான செயற்பாடு. இதனால் அந்த மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன.

**இடைக்காலத் தடைக்கு உத்தரவிட விண்ணப்பம்**

அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நடமாடும் சுதந்திரம், சம அந்தஸ்து, பொதுச் சுதந்திரம் என்பன இவ்வாறான தடுத்துவைத்தல் மூலம் மீறப்பட்டுள்ளன.

இவர்கள் சுதந்திரமான முறையில் வெளியில் நடமாட தடைவிதித்திருக்கும் நடைமுறைக்கு எதிராக ஒரு இடைக்கால உத்தரவை நீதிமன்றம் விடுக்கவேண்டும் - என அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**ஐவரின் சார்பிலான மனு**

கொடிகாமம், வவுனியா ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தவர்களில் ஐவர் சார்பாக சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜா தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு ஏற்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஜெகத் பாலபட்டபெண்டி, சந்திரா ஏக்கநாயக்க ஆகியோர் கொண்ட ஆயமே இந்தமனுவை ஆராய்ந்து விசாரணைக்கு ஏற்றுள்ளது.

பிரஸ்தாப மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள் தமது ஆட்சேபங்களை எதிர்வரும் 17 ஆம் திகதி சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

கொடிகாமம் நலன்புரிநிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள மாணிக்கராஜா சிவபாக்கியம், சோபிகா சுரேந்திரநாதன், வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள ஜெயராணி சுரேந்திரநாதன், பொன்னுச்சாமி சுரேந்திரநாதன், நேசனா சுரேந்திரநாதன் ஆகியோர் சார்பில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்களின் உறவினரான சட்டத்தரணி அன்னபாக்கியம் சிதம்பரப்பிள்ளையின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக யாழ். அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர், யாழ்.படைகளின் தளபதி, பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர், பட்டாணிச்சிப் புளியங்குளம் கிராம சேவையாளர், வவுனியா பிரதேச செயலர், வவுனியா அரச அதிபர், வவுனியா சைவப்பிரகாச நலன்புரி நிலைய கிராம சேவையாளர், வன்னி படைகளின் தளபதி, நலன்புரிநிலைய இணைப்பதிகாரி ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங் கள் வருமாறு:-

இவர்கள் புளியம்பொக்கணையில் இருந்து விசுவமடுவுக்கு கடந்த டிசெம்பர் மாதம் இடம் பெயர்ந்தனர். அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலால் அவர்கள் இடம் பெயர்ந்திருந்தனர்.

மனுதாரர்களில் ஒருவரான சிவபாக்கியத்துக்கு 68வயது. மற்றொரு மனுதாரரான ஜெயராணி கிளிநொச்சி கல்வி வலயத்தில் பணியாற்றி வந்தவர், ஜெயராணியின் கணவரான சுரேந்திரநாதன் பரந்தன் ப.நோ.கூ.சங்கத்தில் பணியாற்றி வந்தார். சோபிகா, நேசனா ஆகியோர் அவர்களின் பிள்ளைகள். அவர்களது மகன்மார் 13, 10 வயதுகளை உடையவர்கள்.

**கோயிலடியில் ஷெல் வீழ்ந்ததால் குடும்பத்தினர் பிரிந்தனர்**

நலன்புரி நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் .

சுதந்திரபுரம் பிள்ளையார் கோயில் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்ததால் பாதுகாப்புத் தேடி ஓடியதால் குடும்பம் பிரிந்து விட்டது. கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகதி குடும்பத்தில் ஒரு பகுதியினர் விசுவமடுவுக்கும் மற்றப் பகுதியினர் புதுமாத்தளனுக்கும் சென்று விட்டனர்.

அதன் பின் 2ஆம், 3ஆம், 5ஆம் மனுதாரர்களை இராணுவம் பிடித்து வவுனியா சைவப்பிரகாச வித்திசாலை நலன்புரி நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

மாணிக்கராஜா சிவபாக்கியமும், சோபிகாவும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு படகு மூலம் கூட்டிச்செல்லப்பட்டனர்.

பின்னர் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் தங்கவைக்கப்பட்டனர். அங்கிருந்து கொடிகாமம் நலன்புரி நிலையத்துக்கு மாற்றப்பட்டு அங்கு தங்கவைக்கப்பட்டனர்.

மாணிக்கராஜா சிவபாக்கியம் வேப்பங்குளத்தில் உள்ள அவரது வீட்டுக்கு செல்ல அனுமதி வழங்கப் பட்டது.அவரது பேர்த்தியான சோபிகா அவருடன் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 13 வயதுடையவர் என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

காயமடைந்த நிலையில் உள்ள சோபிகாவை தனியாக விட்டு அவர் செல்லாமல் தொடர்ந்தும் கொடிகாமம் முகாமில் தங்கியுள்ளார்.

மனுதாரர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ளனர். முகாம்களில் இருந்து மனுதாரர்கள் விடுவிக்கப்பட்டால் குடும்பத்தினர் ஒன்றாக வாழ அவர்கள் ஏற்பாடு செய்வார்கள். எனவே அவர்கள் ஒன்றிணைவதற்கு நீதிமன்றம் ஏற்பாடு செய்ய வேண்டும் - இப்படி மனுவில் கோரப்பட்டுள்ளது.

(அ-1)

## ரயில்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரயில்வே திணைக்களத்துக்கு சொந்த மான காணியில் இரண்டு அரசாங்க கட்டடங்களும் சிறிய கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் வரை ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முதற்படியாக ரயில் பாதைகள் அமைந்திருந்த பகுதிக ளில் வாழும் மக்களை அகற்றும் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

**மாத இறுதிக்குள் வெளியேற்றும் நடவடிக்கைக்கு உத்தரவு**

அதேவேளை-

ரயில் பாதைகளை அமைக்க வசதியாக ஏற்கனவே இடம்பெயர்ந்துவந்து ரயில் பாதைகளில் தங்கியுள்ளவர்கள் மீளஇடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களின் மீள்குடியமர்வு தொடர்பாக பிரதேச செயலர்களுடன் அடுத்த வாரம் ஆராயவிருப்பதாக அரசஅதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

மீண்டும் ரயில் சேவையை ஆரம்பிக்க வசதியாக மாத இறுதிக்குள் ரயில் தண்டவாளப் பகுதியில் வசிக்கும் மக்களை வெளியேற்ற ஏற்பாடுசெய்யுமாறு பிரதேச செயலர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

(அ-1)

## தமிழ்க்கூட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவின் தலைமையில் கூடிய போது சபாநாயகரின் முன்னிலையில் தோமஸ் வில்லியம் தங்கத்துரை சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மாவட்ட எம்.பி. கனகசபை பத்மநாதனின் இடத்திற்கே தோமஸ் வில்லியம் தங்கத்துரை நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகவீனமுற்றிருந்த பத்மநாதன் எம்.பி. அண்மையில் இந்தியாவில் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(சி)

## மன்னார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இது வரை 47 நோயாளர்கள் மேற்படி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர். தற்போது 757 நோயளர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ஐ.நா.அதிகாரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு மறுத்துள்ளது.

அரசின் சார்பில் இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமர சிங்க பி.பி.ஸிக்கு கருத்துக் கூறுகையில் இத்தகவலை மறுத்துள்ளார்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் பெரும்பாலான மக்களை இந்த வருடஇறுதிக்குள் மீள் குடியேற்றுவது என்பது போன்ற தீர்மானங்களை எடுத்திருப்பது அரசே தவிர இராணுவம் அல்ல என்று அவர் கூறியுள்ளார்.

## அதிகாரப்பகிர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சிவநேசன் கொலை செய்யப்பட்டார் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. ஆனால், புலிகளின் பயங்கரவாதத்திற்கு இலக்காகியே கொல்லப்பட்டார்.

இருப்பினும், மக்கள் பிரதிநிதிகள் இனியும் இவ்வாறு கொலை செய்யப்படும் நிலை ஏற்படாது. புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டதால் இவ்வாறான கொலைகள் இடம்பெற வாய்ப்பில்லை.

சிவநேசனின் கருத்துகளுடன் நான் நூறு வீதம் ஒத்துப்போகாவிட்டாலும், அவர் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

சிவநேசன் மக்களின் வாக்குகளைப் பெற்று வந்தவர். குண்டுகளைக் கட்டிக் கொண்டு வரவில்லை. அவர் பிரதிநிதித்து வப்படுத்திய மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும்.

அவர் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களும் வவுனியா அகதி முகாம்களில் உள்ளனர். அவர்கள் உடன் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் அரசியல் தீர்வு விடயத்தில் இறங்கவேண்டும். அதற்காக நாம் ஒன்றிணைய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிரவாதப் போக்கிலிருந்து விடுபட்டு தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைத்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முன்வரவேண்டும்.

தமிழருக்கு அதிகாரப்பகிர்வு வழங்கப்படவேண்டும் என்று நான் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றேன் - என்றார். (சி)


THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA.
14.06.2009 ஞாயிறு தொடக்கம் அனைத்து உயிரியல் வகுப்புகளும் வழமைபோல் நேர அட்டவணைப்படி நடைபெறும்.
By:- சு.பொன் திவாகரன்

SHAMROCK
சுச்சோட்டை, யாழ்.
A/L 2011
Sat,Sun,5pm
B.sc.
★ O/L Day class

12.06.2009 ல் நாம் ஐந்தாவது அகவையில் அடியெடுத்து வைத்ததை முன்னிட்டு கட்டணச் சலுகைகளுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
Diploma in Ms Office., Dip. in Programming Languages.
Diploma in GIT (G.C.E.A/L)., Dip. in DTP & Graphics Design.
Diploma in ICT (Grade 10&11). Diploma in Web Designing.
Diploma in Accounting Packages., Children Programme.
Diploma in Hardware and Networking., Internet & E-Mail.
CB Computer Academy
Station Road, Kondavil. ☎ 021-4590291

HERO HONDA
CD Deluxe
(Self Start)
தன்னியக்கியுடன்
யாழ் விலை 133,500/- மட்டுமே!





இரத்தின கோபால்
RG
இல. 63, 65, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 2226185/9

Scc கணினி பயிற்சி நெறிகள்
பயிற்சி ஆரம்பம் 17.06.2009
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN AUDIO & VIDEO EDITING
♦Adobe Photoshop ♦Adobe Premier ♦Cool3D Studio ♦pinnacle Studio ♦VCD Cutter ♦Capturing
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
♦Tally Quick Books • Accpack • MYOB
DIPLOMA IN AUTOCAD
Softview Computer College
55, Arasady Road, Jaffna.

ATX CASING (With Power Supply)
All Brands 2750/-

PROCESSOR
Intel 1.8 Celeron 5200/-
Intel 2.0 Duo Core 8500/-
Intel 2.5 Duo Core 9200/-
Intel 2.53 Core 2 Duo 13250/-

FM Modulator 11000/- (for Vechicle use)

COMPUTER TABLE 3000/- to 3750/-





MOTHER BOARD
Processor with Mother Board 6900/-
MSI 945 DDR II 5250/-
Biostar G 31 5750/-
Astrock G 31 5750/-
Foxconn G 31 6200/-
Interl DG 31 7750/-

UPS
Techcom / Datamax 650 W 4000/-
Intex 600 W / Prolink 650 W 4400/-
DCP 650 W 4600/-
Power Tree 650 W 4900/-
Power Tree 1200 W (1.2 KV) 9400/-
UPS Battery (12 V) 1500/-

MONITOR - LCD
17" CRT HP Monitor 9000/-
15" LCD Monitor 11250/-
17" LCD Samsung / LG 13750/-
19" LCD Samsung / LG 17900/-
22" LCD Monitor 26000/-

DVD WRITTER (SATA)
LG CD Writter 2000/-
Samsung DVD Writter 3400/-
LG DVD Writter 3250/-
Asus DVD Writter Light Scribe 3950/-
Sony DVD Writter 3550/-

PLAYERS
MP3 Player 2 GB 2500/-
MP3 Player Display Model with FM 3750/-
MP5 / MP4 Player Orange 2 GB 6500/-

RAM
1 GB Kingston DDR II 1800/-
2 GB Kingston FFR II 3500/-
SD Ram 256 MB 1000/-

Power Supply
450 W (24 Pins) 1500/-
500 W (24 Pins) 1650/-
Only Casing 1500/-

HARD DISK
120 GB SATA 4900/-
160 GB SATA 5100/-
250 GB SATA 5700/-
500 GB SATA 8250/-

ACCESSORIES
Bluetooth 600/-
Recovery Card 1700/-
Laser Mouse 350/-
Keyboard 400/-
Card Reader 500/-
Head Phone 350/-
Modem 650/-
USB Hub 350/-
3D Sound Card 850/-
Scanner 5900/-

வீடுகள், நிறுவனங்கள், வர்த்தக நிலையங்களுக்கான பாதுகாப்பு கருவிகள் பொருத்தித் தரப்படும்

TV CARD
Internal TV Card 2600/-
Combo External Box 2750/-
LCD Combo Box 4600/-

VGA CARD
MSI PCI Express 512 MB 5250/-
PCI Express ATI 512 MB 6900/-
AGP 128 MB 4250/-
AGP 32 MB 2250/-

SUBWOOFERS
Creative 2.1 SBS380 3300/-
Micro Lab 2.1 M280 3700/-
Creative 5.1 A500 7500/-

PRINTER
HP 1560 DeskJet 4600/-
Laser Printer 13500/-
Canon Colour Printer 5500/-

* Stock Available

MUSIC WORLD & COMPUTERS
தொலைபேசி / தொலைநகல்: 021 222 6664

VOICE RECORDER
Transcend 4 GB 7500/-
Transcend 8 GB 10500/-

* Warranty Value 1-3 years


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.